268

தேதி: 25.3.64.
ஓலைச்சுவடியின் பெயர்: "வைத்திய அட்டவணை" கட்டு-6.
உரிமையாளரின் பெயர்: எம். பெருமாள் சேர்வை.
இடம்: மோகனூர், நாமக்கல், சேலம்.

218

***

குருகுரு

குருகுரார் தயிலம்:-

கெந்தகம் பலம். ½, வெடியுப்பு பலம். ½, வீரம் விராகனிடை. க, சாரம் விராகனிடை. க, மனோசிலை விராகனிடை. க, பசுவின் நெய் படி. ¼ இதுகளெல்லாஞ் சாம நேரம் அரைத்து மூழ ரெட்டிலே தடவி சுருட்டி அனலிலே காய்ச்சி பிழிந்து முப்பூ சுன்னம் போட்டு சக்கரையில் வைத்து சாப்பிடவும். க்ஷயம், குன்மம், வாய்வு, கபம் நேத்திர வியாதி யித்தனையுந் தீரும். பத்தியம் வாய்வு பதார்த்தம் ஆகாது.

ஓமத் தயிலம்:-

ஓமம் படி. க, கெந்தகம் பலம். ½ சுக்கு பலம். ½, திப்பிலி பலம். ½, மிளகு பலம். ½, சாக்கும் கலசத்தில் போட்டு அதின் பேரில்----போட்டு அதின் பேரில் முருக்கம் பட்டை கொஞ்சம் போட்டு பன்னுடை வைத்து மேல் அகல் சட்டி கவுழ்த்து மூடி சீலை மண் செய்து 80 விருட்டியில் புடம் போடவும். தயில மிறங்கும். சகல வியாதிக்கும் அநுபானம் சித்தரத்தை, சாலாமிசிரி, கருப்புகட்டி நெய்யில் கொடுக்கவும். மூல வாய்வுக்கு சன்ன லவங்கப் பட்டை வறுத்து தூள் பண்ணி கருப்புகட்டியில் சேர்த்துக் கொடுக்கவும். சூலைக் கட்டுக்கு யிப்படி நெய்யிலது பானித்துக் கொடுக்கவும்.

தாளிச பத்திரி வடகம்:-

தாளிச பத்திரி பலம். க, திப்பிலி பலம். ½, சுக்கு பலம். ½, மிளகு பலம். ½ ஏலம் பலம். ½, கடுக்காய் பலம். ½, தான்றிக்காய் தோல் பலம். ½, நெல்லிப் பருப்பு பலம். ½, லவங்கப் பத்திரி பலம். ½, திப்பிலி மூலம் பலம். ½, செவியும் பலம். ½, சிறுநாகப்பூ பலம். ½, சிறுதேக்கு பலம். ½, கிராம்பு பலம். ௨, சீரகம் பலம். ½, சித்தரத்தை பலம். ½, ஓமம் பலம். ½, நல்ல வெல்லம் 8 பசும்பால் சேர். க, இந்த மருந்தைப் புச்சையா யிடித்து வடி கட்டிக் கொண்டு மேற்படி வெல்லத்தை நருக்கிப் போட்டுப் பாலை விட்டு மர்ப் பிசைந்து அடை தட்டி மிஞ்சின பாலைச் சட்டியில் விட்டு சட்டிக்கு வேடுகட்டி சீலை கட்டி அதில் மேற்படி அடையை வைத்து மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து கமலாக்கினி போலே ஒரு சாமம் யெரிய விட்டு இறக்கின பதத்தில் அந்தப் பாலை கொட்டு விரல் பருமன் யிறை நளம் உருட்டி நிழலுலத்தி வைத்துச் கொஞ் அந்தி இரண்டு வேளையும் இப்படி தினம் சாப்பிடவும். தீரும் வியாதி பயித்திய வெட்டை, மேக வெட்டை, புகைச்சல் இருமல், பொருமல், வாந்தி அரோசிகம், விக்கல், அஸ்தி சுரம் சோகை காமாலை வீரிய புஷ்டியில்லாமல் இருக்கிறதும் உண்டாகும். இவ்வளவு வியாதியும் தீரும் கை கண்டது.

சகல வியாதிக்கும் கோடா குளி மாத்திரை:-

ரசமம, நாகம், இலி, கெந்தகம், மனோசிலை, அரிதாரம், வெங்காரம், நவச்சாரம், சவுக்காரம், சூடக்காரம், திரிகடுகு, திரிபலாதி, சீரகம், கருஞ்சீரகம் சதகுப்பை, கொத்தமல்லி, வாய்விளங்கம், வங்காயளப் பச்சை, ஒரிலைத் தாமரை, குதிரை குற்ப பிட்ட, தக்காளி ஆக இருபது மருந்தும் களஞ்சிப் படியே கூட்டிக் கொள்ளவும். நேர்வாள் ந் தோடு போக்கின விரை முப்பது ஆக மருந்து இருவத்தொன்றும் சேரக் கூட்டி சுத்தி பண்ணத் தக்க தெல்லாஞ் சுத்தி பண்ணிக் கூட்டி எண்ணி அரைத்து அநுபானம் கையாந்தகரைச் சாறு விட்டு பத்து நாளரைக்கவும். நொச்சியிலைச் சாறு விட்டு பத்து நாள் அரைக்கவும். துளசியிலைச் சாறு விட்டு ஆறு நாளரைக்கவும். ஒரு சிறங்கை களிப்பாக்கும், நாலு வெத்திலையும் போட்டு இடித்து சாறு பிழிந்து அந்தச் சாற்றில் மூன்று நாளரைக்கவும். இந்தப் படியே முப்பத்திரண்டு நாளரைத்து உருந்தப் பிரமாணம் உருண்டை பண்ணி மூன்று நாள் நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு சகல வியாதிக்கு அநுபானத்துடனே செய்யவும். க

குளிகை வகை:-

வாத சுரத்துக்கு நொச்சியிலை சாற்றிலே ஆகுதல் வேப்பம் பட்டைச் சாற்றிலே ஆகுதலிடவும். பித்த சுரத்துக்கு கடுகுரோகணி சுக்கு கசாயத்திலிட்வும். சேற்றும் சுரத்துக்கு கடுக்காய் நெல்லிச் சாற்றிலே தேன் நெய்யிலிலவும். தாப சுரத்துக்கு நற்சீரகம் சர்க்கரையிலிடவும். கொத்தமல்லி சர்க்கரை கூட்டியு மிடலாம். முலைப் பாலிலு மிடலாம். சீத சுரத்துக்கு அதிமதுரம், பச்சரிசிக் கடு நீரிலுரைத்து யிடவும். அதிக உஷ்ண சுரத்துக்குப் புளியிலைச் சாற்றிலிடலாம். சகல களிச்சலின் பேரிலே யெடுத்த சுரத்துக்கு அதிவிடையம், கோரைக்கிழங்கு வெட்பாலை மாகனை ஒடு வில்வலைச் சதையும் கூட்டிக் கசாயத்திலிடவும். சன்னி வாத சுரத்துக்கு வில்வம் வாதமடக்கி நெருஞ்சி இந்த வேரில் கசாய மிட்டு ஒரு குளிகையிடவும். பித்த சன்னிக்குப் பூகம்

பூலகம் முசுறு முட்டை பசுவின் பாலிலிடவும். சகுறு பட்ட சுரத்துக்கு பசுவின் நெய் யிலிடவும். பயித்தியன் பேரில் வந்த சுரத்துக்கு கண்டங்கத்திரி குலைக் சக்திரியிலை பிட்டவித்து சாத்திலிடவும்.

சகல_வியாதிக்கும்_மகா_கொடரக்_குளிகை_மாத்திரை_பண்ணும்_விபரம்:-

கொள்ளவே சொல்லுகிறேன் பறங்கிப் பட்டை கூகைப் பலம் அஞ்சு சீனி அஞ்சு
அள்ளவே முப்புறண்டி அசுவம் சங்கு அழகாகும் கொடிவேலி வலம் வகைக்கு ரெண்டு
மெல்லவே தாளிடித்துச் சூரணித்து கிரமாகக் கோதம்பை மாவு மங்கா வகான
கள்ளமாய்ச் சேர்ந்த பின்பு சட்டி ஒன்று காய வைத்து நெய்படி தான் ஒன்று விட்டுக்
கொள்ளவே குன்செம் கொட்டை பலமே ஒன்று குமிளெடுத்துத் தான் போட்டுக் கொதிக்க வைத்து
பள்ளவம் போல் நஞ்சு வெளி வந்த பின்பு பாங்காகக் கொட்டைதனை யெடுத்துப் போட்டு
செள்ளமறச் சூரணத்தைப் போட்டுக் கிண்டி திறமாக நீ யிறக்கி கொண்டு வந்த பின்பு
விநாயகனைப் பூசை செய்து வாக்கா உருவியாய்க் கொள்ளும் போது உத்த தரும்
சிறந்தி அறுகுலைரோகம் ஒளியாத வெட்டை பிறமியங்கள் மெத்தளவே மேகத்தின் ஊறல் போகும்
விதன முதல் மன் பொறைகள் கூடிப்புப் போகும் கைத் திறமாயச் சொல்லி விட்டேன்
வரிய முண்டால் சுவரா என் மருந்தைச் செய்த பாரே.

புளி, புகை தள்ளவும்.

பறங்கி_பட்டைச்_சூரணம்:-

பறங்கிப் பட்டை பலம்.உ, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தாலிசகா தானிக்காய், நெல்லிமுள்ளி, நற்சீரகம், கருஞ்சீரகம், ஏலம், ஓமம், சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, செங்கத்தாரி, அமுக்குரா கொடிவேலி, சுங்கம் வேர், அதிமதுரம், சித்திரத்தை, வாய்விளங்கம், கார்போகரிசி, காட்டுச் சீரகம் வகைக்கு விராகனிடை.உ, எல்லாவற்றையும் யிடித்துச் சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு தேன் சர்க்கரை சீனியில் அநுபானம் பண்ணிச் சாப்பிட மேக வாய்வு, மேக யிடிப்பு தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

நீரழிவுக்கு:-

ஆனை நெருஞ்சி, சமூலங் கொண்டு வந்து தலைத்துக் கால்படி சாறு பிழிந்து கொண்டு அதில் பொரிகாரம், நெருப்பில் பொரித்துச் சாத்தில் கலந்து கொண்டு மூன்று நாளைக்கு சாப்பிட்டுக் கைப்பு, புளிப்புத் தள்ளவும்.

கிருமிக்கு_மருந்து:-

எலுமிச்சம் பழம், கிராம்பு, சாதிக்காய், ஏலம், லவங்கப் பத்திரி இந்த சரக்குப் பொடி பண்ணி எலுமிச்சம் பழத்தில் வைத்து மன் செய்து உமிக் காந்தலில் வைத்து மன் கருகவேக வைத்து தண்ணீர் வார்த்து அரைத்து எருமைத் தயிரிலே மூன்று பொழுது சாப்பிட்டால் கிருமி ரோகமெல்லாந் தீரும்.

இருமலுக்கு:-

தாலைவளை வேர், கண்டங்கத்திரி வேர், வில்வவேர், இன்பறல் வேர், சிறு காஞ்சொறி வேர், வகைக்கு பலம் $1\frac{1}{4}$ சீரகம் பலம் $\frac{1}{4}$ கசாயம் வைத்து ஐந்து நாள் கொள்ளவும். இது கை கண்டது.

எலி_கடிக்கு:-

அமுக்குரா வேர் காடியிலரைத்துக் காடியில் கரைத்துக் கொடுக்கப் பனிரெண்டு எலி கடியுந் தீரும்.

லோக_செந்தூரம்:-

லோகம் விராகனிடை.10, கிட்டம் விராகனிடை.10 காந்தம் விராகனிடை.10 காளகம் கறுடு விராகனிடை.5, ரசம் விராகனிடை.5, அரைப்பு உத்தாமணிச் சாறு புடம் குக்குட புடம்.

பவழச்_சுண்ணம்:-

எருக்கம் பாலில் ஏழு தினத்துக்கு பிரட்டிக் காய வைத்து எட்டா நாள் முழப் புடம் போடவும். மறுநாள் முயல் ரெத்தத்தில் பிரட்டி முழப் புடம் போடவும். பவழத்தை பழச் சாத்தில் சுத்தி பண்ணவும்.

அரப்பொடி_செந்தூரம்:-

அரப்பொடி ஒரு பலங் கொண்டு வந்து மாதளம் பழச் சாறு வார்த்தரைத்து கிளிஞ்சி செப்பில் அடைத்து மேலே சீலை மன் செய்து காட்டெருவில் புடம் போடச் செந்தூரம்.

<u>பீனிசத்துக்கு எண்ணெய் :-</u>

இஞ்சிச் சாறு, பசுமஞ்சள் சாறு, நொச்சிச் சாறு, துளசிச் சாறு வெற்றிலைச் சாறு, கற்பூர வல்லிச் சாறு, மொசுமொசுக்கைச் சாறு, கஞ்சாங் கோரைச் சாறு, சாறணையிலைச் சாறு வகைக்குச் சாறு படி 1/8 நல்லெண்ணெய் படி.க, கடை மருந்து ஏலம், லவங்கப் பட்டை, தேவதாரம், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், செண்பகப்பூ, சாதிக்காய், அரத்தை, வாய்விளங்கம், வகைக்கு விராகனிடை.க, ஆக சாறு வார்த்து அரைத்து எண்ணெயில் போட்டுக் கலக்கிக் கணபதி பூசை பண்ணி அடுப்பேற்றி மூன்று நாள் சிறு தீ யெரித்து ஊற விட்டு நாலா நாள் மெழுகு பதத்தில் வடித்து நாசி -நாசிக்கொடுக்க கால் முழுகி வரவும். சீயக்காய் தேய்த்துத் தொள்ளவும். இதுக்குச் சகல பீனிசமுந் தீரும்.

<u>துத்த நாக செந்தூரம் :-</u>

துத்த நாகம் பலம்.10 கொண்டு வந்து இலுப்பெண்ணெயும் பசுவின் நெய்யும் கரண்டியில் நடவி இருபது தரம் உருக்கிச் சாய்க்கவும். பிறகு எடுத்து ஒரு சட்டியில் இட்டு வெடியுப்பு நாழி ஓமம் படி.1/8, சுக்கு பலம்.கி, மஞ்சள் பலம்.க; பொடி செய்து இந்தப் பொடி சிறுகச் சிறுகப் போட்டு வறுக்கவும். பிறகு தன்பு சிவந்த நாயுருவி கண்டங் கண்டமாகநறுக்கிப் போட்டு வறுக்கவும். மாதளம் பூப் போலே சிவந்து செந்தூரமாம். அந்தச் செந்தூரத்தை ஒன்றிலே வைத்துக் கொண்டு மேற்படி செந்தூரத்துக் கருபானம். ஒரு பணவிடையும், திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் நாற்பது நாள் இரவு நேரமும் கொள்ளவும். ஈளை இருமல் எலிகடி, மந்தார காசம், காய சுவாசம், சுவாச காசம், அரிகுரல், நெஞ்சு நோக்காடு, சேற்பம் கோபந் தொண்ணூற்றித் தாறு பித்த கோபம் நாற்திருவத் தெட்டும் உஷ்ண ரோகம் முன்னாத்திருவத்தாறும் சுக்கிலப் பிரமியம் பதினெட்டும் இந்திர கண்டி யாவதும், கல்லடைப்பன் பதினெட்டும், சதையடைப்பன் பதினாறும் குன்மம் பதினெட்டும் சோம ரோகம் பனிரெண்டும் பவுத்திரம் இருவதும் முக யெரிப்புக் கை யெரிப்புக் காலெரிப்பு இவை தீரும். செந்தூரம் ஒரு பணவிடையும் ஆவாரை பஞ்சாங்கம் பொடி செய்து வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் ஆவாரைத் தயிலத்தில் குழப்பி இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ளச் சத்தி குன்மம் வலி குன்மம் எரி குன்மம் இருமல் எலி கடி வாய்வு ம் வாதம் எண்பதும் குஷ்டம் பதி னெட்டும் சிரங்கு, சொறி சேற்பம கோபம் வயத்தில் திரட்சிகரும உள்ளங்கால் எரிவும் உடம்பேறக் கடுப்பும் மூலக் குத்தும் தீரும். மேற்படி செந்தூரம் அறப் பணவிடையும், பேய்ப்பீர்க்கங் காய் சுட்டுத் தூள் அரைப்பணவிடையுந் தேனில் குழப்பித் கண்டில் தடவிப் புணரச் செற்பப் புழுவுஞ் செத்துச் செற்ப ரோகமும் போய்ப் புத்திர சந்தான முண்டாம். இந்தபடி ஆசன மூலத்துக்கு மூன்று நாள் தடவ மூலை முளை கரையும். மூல வாய்வுந் தீரும். செந்தூர முற்றும்.

<u>ரச செந்தூரம் :-</u>

முப் பிறண்டைச் சாறு மூன்று சிறங்கை ஒரு பீங்கானில் வாங்கிச் கொண்டு இருபது விராகனிடை ரசங் கல்வத்திலே விட்டு இந்தச் சாறு விட்டு நாளைக்கு இரண்டு சாமமரைக்கிறது. வெண்ணை போலாகும். அதை வெய்யிலிலே வைக்க இறுகும். இந்த மெழுகைத் திரட்டி வைத்துக் கொண்டு மறுபடி முப்பிறண்டையை அரைத்து ரச மெழுகு உண்டைக்கு கவசங் கட்டிக் காய வைக்க சிறு சட்டியில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து காய வைத்து ஆட்டெருவு ஒரு பங்கு புளியம் புறணி ஒரு பங்கும் பச்சை இந்துப்பு உமி ஒரு பங்கும் ஆட்டெருவும் புளியஞ் சிராயும் இடித்துக் கொண்டு மறுபடி உமியுங் கலந்து வைத்துக் கொண்டு நிலத்திலே சட்டி யளவுக்கு ரெட்டிப்புக் குழி கெல்லி அந்தக் குழியிற் குள் பாதிக்கு செராய்த் தூள் ஆட்டெருவு உமி கலந்த தூளில் போட்டு அதின் பேரிலே சட்டியை வைத்து அதின் பேரிலே பாதித் தூளும் போட்டு நாலு புறமும் தீப்போட்டு சுளகினாலே விசிறி எரிச்சு ஆற விட்டு எடுத்துப் பார்ப்பக் பற்ப குருவாகும். அதை எடுத்துச் சிவ பூசை குருபூசைகள் செய்து வைத்துக் கொண்டு வெள்ளீயம் ஒரு துலாம் உருக்கு முகத்திலே ஒரு விராகனிடை கொடுக்கப் போடவும். போட்டவுடனே புழுங்கலரிசித் தவிடும் கொஞ்சந் தண்ணீர் விட்டுப் பிசறி வைத்துக் கொண்டு குருப் போட்டவுடனே இந்தத் தவிட்டைப் போட்டு மூடி அதின் பேரில் பச்சை உமியைப் போட்டு மூடி ஆற விட்டு எடுக்கவும். மேற்ப தவிடும் உமியும் போடுகிற தேனென்றல் யீயம் உருக்கு முகத்திலே ரசக் குருவு போட்டவுடனே சீறி ஒப்பென்று எடுக்கும். அது நிமித்தியம் போடுகிறது. மேற்படி பிறண்டையைச் கிட்டி கட்டிச் சாறு பிழியவுந் கப்பி கையிலே பட்டால் தினவு வெடுக்கும். அந்தக் தினவு அடங்க முப்பிறண்டை தலைத்த சக்கையைச் சுட்டுச் சாம்பல் பண்ணி சிறுநீர் விட்டுக் குழப்பிப் பூசத் தினவு நிற்கும்.

<u>பாஷாணக் கட்டு :-</u>

தேசிநீர் படி.க, அமுரி படி.க, பழம் புளியிற் சேர்த்துக் கரைத்து டோலேந் திரங் கட்டி எரிக்கக் கட்டும்.

<u>முப்பூ முறை :-</u>

பூநீறு படி க-க்கு சலம் இரண்டு படி வெடியுப்பு படி.¼ அண்டத்தண்டை.4,

4 யித்தனையும் போட்டி அடுப்பேத்திச் காய்ச்சிப் பொங்கி வருகிற போது இறக்கி துணியில் வடிகட்டி அந்தச் செயநீரைச் சசாவில் வைத்துக் கொண்டு மேற்படி சரக்கைக் காய வைத்து அரைத்து வில்லை செய்து காய வைத்துக் குக்குட புடம் போட்டு எடுத்துக் கொண்டு மறுபடியும் செய்நீர் விட்டு அரைத்து வில்லையாக்கி அப்படியே புடம் போட்டு எடுத்து இந்தப் படி 11 புடம் போடச் சுண்ணமாகும். இதுவே முறை. கை பாகமாய்ச் செய்யவும்.

<u>கபம் சூடு மூலச் சூடு மருந்து:-</u>

தீருமே அக்கினியிலே சூடு கொண்டால் தீருத வறட்சியொடு யிரைப்பிருமல்
தீருமே புகைச்சலொடு தொண்டைக் கம்மல் சிறுக்கிருமல் நாக்குளறல் வறட்சி கோழை
கூடுமே உள் வறட்சி மூலச் சூடு கூறரிய பித்தமொடு கணவேக்கங்கள்
அருமே பாவை யெல்லா மோடிப் போக அறைகிறேன் ஆடாதோடை கோஷ்டம்
திப்பிலியும்.
திப்பிலியாம் வசம்போடு நெல்லி முள்ளி கடுக்காய் சிறுவழுதலை வேரரத்தை கற்கடக
சிங்கி
கப்பரிய முளகோடு நாகப் பூ ஏலக்காய் கால் பலமே சேர்த்திடித்துச் சூரணமே செய்து
வெப்பரிய நாளொன்றுக்கந்தி சந்தி வெருகடி தான் தானெடுத்து விளம்பக் கேளும்
செப்பரிய நெய் தேனில் குழைத்துக் கொள்ளச் செப்பியதோர் நோயெல்லாம் தீரும்
பாரே.

<u>விளக்கெண்ணை தயிலம்:-</u>

சங்கிலை பிடி இரண்டு ஆடுதின்னாப் பாளை பிடி.க, வெங்காயம் பிடி.க, இம் மூன்றும் போட்டு இடித்து ½ படி சாறு வாங்கி ஒரு படி விளக்கெண்ணெயில் விட்டு மறுபடியும் ஒரு குருக்க செடி ஆடு தின்னாப் பாளை வெங்காயம் பக்கு இம் மூன்றும் நசுக்கி யெண்ணெயில் போட்டு அடுப்பேத்தி வெங்காயம் பொன்னிறத்தில் இறக்கி வடித்து எண்ணையை எடுத்துக் கொண்டு கடுகைக் கூட்டச் சாறருக்கு அரைத்து கொடுக்கச் சொல்லவும். ரசக்கிரி பெருவியாதிக்கு எண்ணை கொடுத்தால் 3 நாள் கொடுக்கவும். ராத்திரிக்கு கட்டிடை சாப்பிடவும். பத்தியம் கடும் பத்தியம். 7 நாள் தலைக்கு தண்ணீர் விடும் போது ஓமம், வேப்பங் கொழுந்து, மஞ்சள் தேய்த்துத் தண்ணீர் விடவும். ஒன்பதாம் நாள் தலைக்குத் தயிலம் நல்லெண்ணெயில் ஆடு தின்னாப் பாளையும் குக்கும் போட்டுக் காய்ச்சி முழுகவும். 3 மாதத்துக்கு வாழைக்காய், வாழையிலை, வாழைப்பழம், கோழி, மீன், ஆடு அகத்தி பூசனிக்காய், பாகற்காய் மொச்சை பெரும் பயறு யின்னம் வாதப் பதார்த்தங்கள் ஆகாது. 6 மாதத்துக்கு அவ பத்தியம் ஆகாது. இதுக்குத் தீரும் வியாதி குஷ்டம், பெருவியாதி, செம்மேகட் இது முதலானது தீரும். 9-ம் நாள் புளி கூட்டவும். முருங்கைப் பிஞ்சு, கத்தரிப் பிஞ்சு, பருப்பு பயறு 15 நாள் நெய் கூட்டவும். முளைக்கீரை மோர் கூட்டவும்.

<u>உப்புக் கட்டு பற்பம்:-</u>

கல்லுப்புக் கல்வத்திலிட்டு நத்தைச் சூரி சாறு விட்டு அரைத்து வில்லை செய்து புடம் போட்டு அப்படியே 3 புடம் போட்டு எடுத்துக் கொண்டு கவுதும்பை செடியைச் சுட்டுச் சாம்பலாக்கித் தணியில் வைத்து வடிகட்டிக் கூடச் சேர்த்துக் கொண்டு சுக்குத் தாள் பன்னி வெருகடி தாரும் இந்த பற்பம் வெருகடியும் வைத்துச் சாப்பிட்டு வெந்நீர் சாப்பிடவும். இந்தப்படி 11 நாள் சாப்பிடக் குன்மந் தீரும்.

<u>பல் வலிக்கு மருந்து:-</u>

பாலென்றால் பச்சைப் பால் குடிக்கத் தீரும்.
பல் வலிக்கு மருந்துண்டு பகரக் கேளு சேலென்ற நாயுருவி வேரை வாங்கிச் சேர்த்தி
டுவாய்
பலம் பத்துப் பாண்டத்துள்ளே சீலென்ற வசம்பு அரப்பலமும் போடு தீ யெரித்து
வெட்டொன்று கசாயம் வாங்கி மேலென்ற அந்தி சந்தி கொப்பளிக்க வீக்கமொடு
பலவலிகள் விட்டுப் போமே.
விட்டுப் போம் ஒருதலை நோய் மண்டைக் குத்து விசையான தலைவலிக்கு நிசியங் கேளு
தட்டுப் போல் சுக்கு யிரு பலமு என்முழி சலத்தை விட்டு தானியாயதருகக் காய்ச்சி
கட்டி போற் தேங்காய் நெய் அரைக்கால் விட்டு தாள் விலாக் குங்குமப்பூ விராகன்
போட்டு
வெட்டி போய் நெய் வடித்து நசிய மிட்ட யிருந்து விட்ந் தன்னை விட்டு யேகும் பாரே.

யேகுமே மேக சலமிவதுக்கும் யிதமான பவள பற்பம் ஒன்று சொல்வேன்
வாது பெற முசலெலும்பைச் சுட்ட சாம்பல் மக்களே பலமொன்று குமரிப் பாலால்
பாகு பெற அரைத்துருட்டிக் குகை போல் செய்து பவளமென்ற ஒரு பலமும் கிராம்பு
மாஞ்சி
வேகு மொன்று கால் களஞ்சி வீரம் கால்கான் விசையான முயல் ரெத்தம் விட்டு ஆட்டே.

ஆட்டியே வில்லை தட்டிக் காய வைத்து அப்பனே ஓகைக்குள். வைத்துச் சீலை செய்து
நாட்டியே அன்ப கெருப் புடத்தைப் போடு நலமான பவளமது பற்பமாகும்
கூட்டியே அமுர்த சர்க்கரையிற் கொள்ள கொடிதான மேக சலம் குடி யோடிப் போம்
மேட்டிலே விரைத்த விரை போலே ஆச்சு மிலைச்சருக்கு நால் கிடைந்த விஜும் பாரே.

__பூனீறுக் குரு:-__

. பூனீறு.க, பங்கு அண்டம்.3/4, பங்கு போட்டு ஜசி நீர் விட்டுக் காச்சிப் பொங்கும் போது இறக்கி அண்டத்தை யெடுத்துக் கொண்டு பூனீற சடிகட்டி செய்நீரை யெடுத்துக் கொண்டு இரண்டு சரக்கையும் காயப் போட்டு அப்படியே சட்டில் வைத்துச் சீலை செய்து புடம் போட்டு எடுத்துக் கொண்டு வெடியுப்பை உருக்கி உருக்கின உப்பு.உ, பங்கும் மேற்படி சுண்ணம் 2,3 பங்கும் போட்டு மேற்படி செய்நீர விட்டு அரைத்துக் காய வைத்துப் புடம் போடவும். இப்படியே 11 புடம் போடவும். போட்டு எடுத்துக் கொண்டு சரக்குகளுக்கு கவசங் கட்டிப் போடவும். புடத்தில் வைக்கவும். சகல சரக்குங் கட்டிப் போகும். வைத்தியஞ் செய்யலாம்.

__சூதக வாய்வுக்கு:-__

நிலவாகை, விழி, தைவேளை, கடுகு, கடுக்காய், மஞ்சள், வெள்ளுள்ளி, திருகுகள்ளி இதுகளில் பெரிய படி ஒரு படி என்னைக்கு பச்சிலை வகை ஒன்றுக்கு பலம்.க, ஆக மூன்றிலும் சரக்குகளில் வகைக்கு பலம்.½ ஆலம்பால் கிராகனிட.க இதுகளை அப்படி நிறுத்து நன்றுய் நசுக்கி யெண்ணெயில் போட்டு மெழுகு பதம் பார்த்து இறக்கி வைத்துக் கொண்டு வீடு தூரமான மூன்றும் நாள் ஈரத் துணியோடே ஒரு கறண்டி இந்தப்படி 3 நாள் காலை வேளை கொடுக்கவும். கடும் பத்தியம். 5-ம் தலைக்கு தண்ணீர் விட்டு பத்திய முறிக்கவும். கை கண்டது. பேய்ப்பீர்க்கு யிலை யிடித்துச் சாறு பிழிந்து இடுப்பு உழக்கிலே ஊத்தி கொட்டைப் பாக்களவு புளி போட்டு எடுத்துப் போட்டுக் கொடுக்கவும். இந்தப்படி 3 தாரத்துக்குக் கொடுக்கவும். பத்தியமில்லை.

__திரிலோக பதங்கம்:-__

வீரம் பலம்.க, பூரம் பலம்.க, லிங்கம் பலம்.க, கல்லுப்படி.3 ஒரு பெரிய சட்டியில் பாதி உப்புக் கொட்டி அழுத்தி யிந்த மூன்று சரக்கும் வைத்து மறுபாதி உப்பும் கொட்டி அழுத்தி மேல் சட்டி பொருந்த மூடி ஏழு சீலைமுன் செய்து அடுப்பில் வைத்து நாலு சாமம் கர்டாக்கினியாக எரிய விட்டு ஆறின பிறகு எடுத்துப் பன்றி முடியிலுல் துடைத்து எடுத்து வைத்துக் கொண்டு சுக்கு பலம்.உ, மிளகு பலம்.உ, திப்பிலி பலம்.உ, அந்த பற்பத்தில் சேர்த்து வெள்ளாட்டுப் பால் விட்டு அரைத்து பெரிய தூதுவிளங்காய் பிரமாணம் உருண்டை செய்து நிழலுணத்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை பசு வெண்ணெயில் சாப்பிடவும். மூன்று நாள் நான்கு நாள் ஐந்து நாள் சாப்பிடவும். சூலை பதினெட்டும், கிரந்தி புண் மேகம் இருபத்தொன்றும், அரையாப்பி யேப்பேர்ப்பட்ட பிடிப்புகளும் சகல வியாதியும் தீரும்: பத்தியமில்லை. சரப்பான், பதார்த்தம் தள்ளுபடி. பசு மோர், பசு நெய் விசேஷமாய்க் கூட்டவும். அலட்சியம். கோழிக் கறி யிது மூன்று மாசத்துக்கு ஆகாது. கடுகு மஞ்சள், உளுந்து ஆகாது.

__கரிசாலை என்னை:-__

பூணுவாய் கரிசாலை என்னை கேளு பொற் கய்யான் பொற் சீந்தி பொன்னுங்காணி
தோணுவாய் சாறு வகை வகைக்கு நாழி தூணி நீராவாரை வேர்க் கஷாயம்
வாங்கி
பேணுவா யெட்டொன்றுய் கஷாயத்துள்ளே பிசகாமல் மூன்று சாறும் விட்டு
தாணுவாய் சீரகமுந் தேவதாரம் சந்தனமும் பல மூன்று அரைத்துப் போடே.

2. அரைத்திடவே யெள்ளெண்ணை படி தாளுவ அதிருடனே வாய் விளங்க மிளகு போட்டு
உரைத்திடவே மெழுகு பதமாகும் போது உடையவர்க்கு பூசை செய்து தயிலந் தன்னை
கரைத்திடவே கடுகு தள்ளி யிறுத்துக் கொண்டு காலமே முழுகி வரக்கின வேறுது.

3. ஏறுது பயித்திய வாய்வெங்கே போச்சு யேப்ப மிடு மேல் வாயன் யெங்கே போச்சு
சீராது மேக வெட்டை யெங்கே போச்சு சிரசுடிய ளொருத் தலை நோயெங்கே
போச்சு
வீறுது மேக யிருபது தொன்றும் கூறுது ஊக்கம் யெண்ணெயிலே கெற்ப வாய்வதும்
பாரு

3. ஏறுது பயித்திய வாய்வெங்கே போச்சு யேப்பமிடு மேல் வாயன் யெங்கே போச்சு
சீராது மேக வெட்டை யெங்கே போச்சு சிரசுடிய ளொருத்தலை நோயெங்கே
போச்சு
வீறுது மேக யிருபது தொன்றும்
கூறுது ஊக்கங்கள் எல்லாம் மாற்றும் குடகரிசாலை யென்னை மூளகே.

4. யெண்ணையிலே கெற்ப் வாய்வுகளும் பாரு யிந்த முறை கெற்பத் தாலெழுந்த நோய்கள்
சன்னையிலே தீருமடா கிருமி சூடு தானத்தின் பூச்சி யெல்லாம் விழுந்து போகும்
வின்னையிலே கருசாலை யெண்ணை மூழ்க வியாதி யெல்லாந் தீருமென விளம்பினேன் பாரே
கண்ணையிலே வியாதிகளுக் கெண்ணை சேரு கருவூமத்தஞ் சாறு கலந்து போடே.

5. கலந்திடவே நல்லெண்ணை யூமத்தஞ் சார் காஞ்சிரங்காய் விரையு மரைத்துப் போடு
மலர்ந்திடவே வீக்க மெல்லாம் வத்திப் போகும் கற்றுன புண் புரைகளாறிப் போகும்
உலந்திடவே சூலைப் புண்ணெல்லாந் தீரும் உக்க புத்துக் கரையுமடா சூடன் சேர்த்தால்
அலந்திடவே யின்னுமொரு அட்வு சேரு ஆமணக்கிலெண்ணையிலே அறையிறேனே.

6. <u>வெள்ளாவாரைத் தயிலம்</u>:-
சூட்டியே வெள்ளாவாரை காணப்பா ஒன்று நன் காலுகளேன்ற வெட்டி
ஆட்டியே குளித் தயிலம் வாங்கிக் கொண்டுஅதிருடனே பஞ்சாங்க மிடித்து சாளாய்
நாட்டியே சீரகமுங் கூட்டி சேர்க்க நாற்பது நாள் தயிலத்தில் குழைத்துத் தின்று
பூட்டியே பதினெட்டுக் குட்டமெல்லாம் போமடா குறை நோவு கூடப் போமே.

<u>சிவன் வேம்புத் தயிலம்</u>:-
கூடப் போம் கர்மாந்திர வினைகளெல்லாங் குடில மென்ற மகா வாகை ஒளிந்து போச்சு
தேடப் போஞ்சிவன் வேம்பு தயிலஞ் செய்ய சிவசிவா வென்ற மந்த மூலி வாங்கே
ஆடப் போஞ் சமூலம் வெட்டிப் பாண்டத்திட்டு அது போல குளித் தயில மிறக்கிக் கொண்டு
சூடப் போம் புண்களிலே தடவிப் போட சுடு விடத்தின் கடி வாய்ப் புண் கண்டும் பாரே.

கண்டும் பார் குறை நோய்ப் புண் தீச் சுடாப் புண் கோமறிள சட்டை கைக்கு தடி மிரப்பு
பண்டும் பார் கிழவும் புண் தள களப்பு படத் தடிப்புக் கலைலை போகும் புண்ணும்
விண்டும் பார் விறி எரும் புண் மேகப்புண்ணும் மேல் தடிப்பு மேல்ச் சினப்பு வீக்கமெல்லாம்
கண்டு பார் தடவி விட்டுக் குளிக்கச் சொல்லு சரப்பன் முதல் தீருமடா காசு கொள்ளே.

காசளவு கொண்டு வா கரப்பன் சூலை கடை கெட்டபெரு நோவு குறை நோயெல்லாம்
தேசவளி போமடா மண்டலத்தில் தேகமெல்லாந் தங்க நிறமாகும் பாரு
மோச மினி வாராது பின்பு சேரு மூது நாளர் நாவுண்டு தேடி தேடிப் பாரே
தேடிப் பார் நாருண்டின் வேப்பம் பட்டை சிற்றவுடன் நிற்குமடா நாவுக்குத் தான்
ஆடிப் பார் நாற பலம் பட்டை வாங்கி நலமான பாண்டத்தில் தயிலம் வாங்கி
பாடிப்பார் வாத மெல்லாம் பறந்து போச்சு பரிவான குட்டமொடு குறை நோயெல்லாம்
ஓடிப் பார்த் தொளிக்குமடா நன்பு கண்டா புலகத்தில் பிணி பேத உரைத்திட்டேனே.

உரைத்த சிவன் வேம்புக்கு நாருண்டுள்ள ஒளிசிறந்த நின்புக்கு மினி மேல்க் சேரு
விரைத்த ஆவாரைக்கும் தயிலம் வந்தால் வேறே யொரு ரச வாதம் வேறுமோ பார் பார்
நரைத்த மயிர் கருக்குமடா மூன்றுஞ் சேர்ந்தால் நமனில்லை செம்பு களிர் கருக்குமடா மூன்றுஞ் சேர்ந்தால்
நமனில்லை விரைத்த செம்பு மாத்தாற் காணும் பாரு செப்பாதே மூன்று மொன்றாய் வழலை நாக்கே.

<u>மருந்தீட்டுக்கு</u>:-
வெள்ளை வெள்ளாட்டு புழுக்கை சுட்ட சாம்பல் ஒரு பிடி காலமே தண்ணீரிலே போட்டுக் குடிக்கவும். மூன்று நாளில் மருந்தீடுக் கரைசிப் போம். லேபன முண்டாம்.

<u>குழந்தைகளுக்கு யெண்ணை</u>:-
வீணாகப் போகாமல் நாலை நாரு வேண்டியே தவஞ்சிருந்து பெத்த பிள்ளை
வாழுவை மாய்க்க வந்த பிறளி நோய்க்கு மக்களே யொன்று வகையாகச் சொல்வேன்
பாலை அவுரி வேர் பலந்தான் ரெண்டு பலத்துடனே புங்கிரடன பலந்தான் காலதான்
காலுமல் பொடிப் பொடியா யரிந்து கொஞ் சுலைய யிட்டு யேரண்டத் தெண்ணை வாரே.
யேரண்டத் தெண்ணை படி யரையும் விட்டுயென் மகனே ரவி முகத்தில் யெட்டு நாள் வை
கூறண்டத் தெண்ணை தனை வெதுப்பிக் கொண்டு குழந்தைகட்குக் கொடுக்க பிறளி சோகை மாந்தம்

சாறண்ட மால் கமலக்கையில் வூாழும் சக்கரத்தைக் கேக்க தொன்ற தானே வீருல்
காருண்ட மேக சலம் பெருங் காக்காலே கன் காறகோடுகின்ற சுகை போலாமே.

<u>தாதுவளைக் கிரதம்:</u>- 1.4.64.

1. இயம்பக் கேள் தாதுவளை பலந்தான் பத்து யியல் கண்டங் கத்திரி தான் பலந்தான் பத்து
சுயமான துளசியது பலந்கான் பத்துக் தோன்றியதோர் கோடையசு பலந்தான் பத்து
நயம் பெறவே விஷ்ணு காந்தி பலந்தான் பத்து நன்றுகப் பிறமியது பலம் பத்தாகும்
செயமாக் யிதை யிடித்துக் தாணி நீர் விட்டு திடமாக வெட்டொன்று யிருத்து வாங்கே

2. இறுத்திட்டு யெண்ணயொடு நெய்யுங் கேரு யிகமான சித்தரத்தை திப்பிலியும் ரெண்டு
வருத்திட்டு வகைக்கு அரைப் பலமதாக வடி மெழுகு போலரைத்துச் செலுத்திச் சிண்டி
முரிக்திட்டுப் போகாமல் வடித்துக் கொண்டு முக்கியமாய்க் கறண்டி நிறை யெடுத்துக் கொண்டு
ஒருத்திட்டுக் கொண்டாக்கால் சீரும் நேர்ய் கேள் உக்கொ யிரும்லெல்லா மோடிப் போமே.

3. ஓடிப் போம் தேன் கூட்டிக் கொண்டாயாகு ஓர சயங்களீளை யிருமலிளைப்புக் கல்
நாடிப் போம் வர்ய்வோடு கபக் கட்டெல்லாம் நாடாமலோர்டி விடும் நளிணமாகும்
தேடிப் போந் திரிகடுகு நெல் பொரியுங் கூட்டிக் தேனிலே தின்ற விடக் கிரகச் சேர்த்து
சேரப் போங் கொண்டிடவே சொன்ன நோய்கள் செயமாகு மென்றருளிச் செய்தவாறே.

4. <u>காது வியர்திக்கு:</u>-
கண்டதொரு செதியொன்று சொல்லக் கேரு காதிலுள்ள வியாதி யெல்லாங் கட்டாய்த் தீர
விண்டாடி முசுரு முட்டை புளுகந் தான் வெற்றியுள்ள நண்டிறச்சி வெள்ளை யுள்ளி
கொண்டபடி கோழி முட்டை வசம்பு குக்கிற் குணமாக வெகை களஞ்சு கூட்டியே தான்
பண்டுருகும் வேப்பெண்ணை தன்னில் வெந்து பதமாக வடித்ததனைக் காதிற் பாச்சே

5. பாச்சியே யடைத்திடுவாய் பத்து நாளில் பனிச்சென்று செவி கேட்கும் சீப்பாச்சல் தீரும்
மாத்தியாங் குத்துளைச்ச லமர்ந்து போகும் வாச்சுதே யின்னமொரு வரிசை கேரு
வாயிலுள்ள வியாதி யெல்லாம் அகன்று போகும்
பாச்சியாம் பூச்சி தன்னைப் பாக்கிற் கூட்டிப் பச்சையாய்த் தின்றெ தக்கில் பல் குத்தப் போமே.

6. குத்து விட முன் புறண்டி வேர்க் கசாயம் கொப்புளிக்கப் பல்லறனை குந்த குலை
யத்துப் போ மலைவு பல்லு முனரப்பதாகும் அருக்கெல்லாந் தீர்ந்து விடு மதின் பின் கேரு
செத்துப் போம் நாக்கில் வரும் சிங்குரோகம் தீரவொரு மருந்து சொல்வேன் சிவன் வேம்பின் வேர்
முத்துப் போல் பல் விள்க்க முப்பது நாள் முன்றயான நோய்க்ளெல்லா முழுதும் போமே.

<u>அரையாப்புக்குக் கட்டிக்கு பத்து:</u>-

7. தானென்ற அரையாப்பு வந்த தானும் சமூலமடா கவுதம்பை பிடிங்கி வந்து
நானென்ற குட்சமடா லாட மூலி நாவிதுவரையாக அரைத்துப் பூச
கானென்ற வூமத்தங் காயைச் சுட்டு கடுக்காயில் தோடு சுட்டுக் கேரு கேரு
வானென்ற கும்பிடுகல் சிப்பி சுட்டு வாளைப் பழத் தோலிச் சுட்டிடாயே.

8. சுட்ட விந்த மருந்துடனே வெல்லங் கூட்டிச் சுகமான சோழி முட்டைக் கருவாளட்டி
மட்ட லருங் குழலாளச் சடையில் வைக்க மாவேந்தி சொன்ன விக்தை மிகிழ்வாய் கேரு
சுட்ட விந்த மூன்று நாள்ப் பூசும் போது கரைந்து வற்று மரையாப்புச் சூஉஞ்சந் தாறும்
வட்ட வந்த தேசத்தி லிந்த மூப் வகை செப்பாரட வாய் நான் வெளியிட்டேனே.

<u>சயமீளை காசத்துக்கு:</u>-

1. பாரே நீ சயந் தீர ஆடாதோடை பாடுகிறேன் தாதுவளை சிறுகாஞ் சோறி
காரே நீ மொசுமொசுக்கை கண்டங்காலி கரிசாலை முள்ளங்கி மணத்தக்காளி
சேரே நீ கருமிறஞ்சிப் முதலையும் சய்கு சேர்த்து நிலவாவரையுங் குபமே செய்து
காரே நீ கடுக்காயுங் கோட்டம் திப்பிலி கருஞ்சீரக யிரு வசம்பிந்தப்பே.

2. உப்பான சித்தரத்தை பேரரத்தை உத்தமமே வாலுளுவை சுகை நீரம்
செப்பாதே சீரகமும் கற்கடக சிங்கி சிறு நாகப்பு வோடு நெல்லி முள்ளி

ஒப்பாக வகைக்குக் காற் பலமே தாக்கு உத்தமனே யிடித்து நன்றாய் முன் மருந்திற் சேரு
செப்பாதே ஆவின் நெய் படி தான் வாரு சிறப்பான வெள்ளாட்டின் பால் படி தான் வாரே.

3. வாத்தமே நெருக்கம் பால் சாறு படி வாரு வளமாக அடுப்பேத்திக் கொதியிடும் போது
பாத்தமே பலங் கற்கண்டு பலந் தாளு பனைவெல்லம் பலம் நாலு போட்டுக் காச்சி
கோத்தயே பாகுவரில் குபலைத்தைக் கொட்டிக் கிண்டு கொம்புத் தேனொரு சிறங்கை கூட வாரு
ஆத்தமே லேகியத்தை பதனம் பண்ணி அந்தி சந்தி நாளொன்றுக் கிரு நேரங் கொள்ளே.

4. கொள்ளுவது பவள பற்பம் அரிதார பற்பம் கூட்டியே நேரமொரு பாக்களவு கொள்ளு
தள்ளாதே மண்டலமே கொள்ளும் போது சயயிளை கபயிருமல் மந்தார காசம்
விள்ளாதே யோடி விடும் சயரோக மேலும் மேக வகை கிறந்தி குஷ்ட முஷ்டன வாய்வு
கள்ளமாம் வியாதி யெல்லாங் காறதோடும் கை கண்ட வித்தை யிது கண்டு பாரே.

5. பாரே நீ புளிப்போடு கசப்புத் தள்ளு பசுவின் நெய்யும் வெள்ளாட்டு மாங்கிஷமுந் கொள்ளு
சேரே நீ ஆவின் பால் வெள்ளாட்டின் பாலும் தினந் தோறுஞ் சீனி யிட்டுக் க காச்சிக் கொள்ளே
சாரே நீ யிம் முறையே செய்து நீயும் சார்ந்து பார் சண்டாள ரோகம் போகும்
யேரே நீ தலை முழுக ஆவின் நெய்யாம் யில்லாட்டால் முக்கூட்டு யெண்ணை முழ்கே.

6. அரிதார பற்பம்:

மூழ்கவே அரிதார பற்பஞ் சொல்வேன் முனையான அரிதாரம் பலந் தானென்று
தேள்வா கடைப சுண்ணம் பலந் தானென்று தேசி நீர் படி ரெண்டு செப்பக் கேள்
வாழ்கவே புதுச் சட்டி தன்னிலே தான் வளமான கல் சுண்ணாங் கீழ் மேலிட்டு
நாள்கவே அரிதாரம் வளி போல் கட்டி நடுவே நீ கிளி வைத்து தேசி நீர் வாரே

7. தேசி நீர் தன்னிலே உவர்ப்பு விட்டுத் தெளிய வைத்து தெளி விறுத்து வார்த்து நீற்று
ஆசியே யிப்படியே யேழு தரம் நீத்து அரிதாரம் மஞ்சள் கக்கி வெள்ளையாகும்
மாசியே யதை யெடுத்து மறு சட்டி யிட்டு மைந்தவே அடுப்பேத்தி யீருள்ளிச் சாறு
காசியே படி யொன்று கபந்தைச் சாறென்று கலந்துமே சுருக்கிட்டுக் கருதிக் கேளே.

8. குருதியே புரம் சட்டை புளியம் பிறணி கனமான நாயுருவி சுட்ட சாம்பல்
கருதுவேன் வகைக்கு ரெண்டு படி தான் சாம்பல் கலந்துமே சட்டியிலே கீழ் மேலிட்டு
அருதியே தாளகத்தில் கவசஞ் சேரு அண்டோடு முள்ப்பூவும் தலை மண்டை யோடும்
வெருவியே சுண்ண நீர் ஆவின் பாலும் விட்டரைத்து மேல்க் கவசங் கட்டி போடே.

9. கட்டியே ரவியிலிட்டு உலர்ந்த பின்பு கனமான சாம்பலிலே நடுவே வைத்து
சட்டியே மேல் சட்டி கொண்டு மூடிச் சந்து வாய் சீலை செய்து அடுப்பிலேத்தி
கட்டியே தென்ன மட்டை தென்னம் வேறால் கமலம் போலெரித்திடுவாய் நாலு சாமம்
அட்டியில்லா தெடுத்து நீ யாற விட்டுப் பாரு அரிதாரம் நீறுமப்பா ஆருஞ் சொல்லார்.

10. சொல்லாத பற்பமொரு பணவிடை தான் மைந்தா சுத்தமான நெய் தேனில் கூட்டிக் கொள்ள
கொல்லாத சயமீளை மந்தார காசம் குலைந் தோடுங் கிரந்தை யரையாப்பு
குலை குட்டஞ் சொல்லாதே வேதை யிட்டால் யேழு மாத்துச் சுக்காகும் ரச பற்பஞ் சேர்த்துக் கொண்டால்
கல்லான வியாதி யெல்லாந் தீருமப்பா வகை முறையாய்ச் சொல்லி விட்டேன் கண்டு பாரே.

பவள பற்பம்:-

11. பாரே நீ பவள பற்பஞ் சொல்லக் கேளு பாங்கான நற் பவளம் பலந்தான் தாக்கு

நேப்பே நீ யிலந்தை யிலை தனை யரைத்து பெண்டடையாய்ப் பிடித்ததின் மேல் பவளம் வைத்
தப்
போபே நீ மேலுமந்த அடையால் மூடிப் பொருந்தவே சீலை செய்து முளப் புடத்தில் போ
ஆபெ நீ ஆற விட்டு எடுத்தப் பாரு அப்பனே பவள மெல்லாம் பீங்கானிலிட்டு.

12. இட்டுமே ஆவின் பால் நிறையவிட்டு யெல் மக்கள் பயிலில் வைக்க நீரும் பாரு
திட்டமாய்ப் பவள பற்பமாகுஞ் சொல்லார் செப்பாதே வெகு சுளிவு திறமாய்ப்
பாரு
கொட்டாதே பற்பமொரு பணவிடை தான் தாக்கு கொம்புத் தேன் ஆவின் நெய்யால்
கூட்டிக்
தட்டாதே காசமோடு சூடு கிரந்தி சயமீளை யிப்பிருமல் நீர்ச் சிறப்புப் போமே.

<u>சிங்கி பற்பம்</u>:-

13. போமென்ற சிங்கி பற்பஞ் சொல்லக் கேளு புகழான கலங் கொம்பு பிளந்த நாலா
ஆமென்ற மேனியிலை யரைத்து அப்பி அப்பனே முழப்புடத்திலிட்டு வாங்கி
தேமென்ற நீருமது தீர்க்கமாக திறமான ஆவின் பால் விட்டரைத்து
வேமென்ற வில்லை தட்டிக் காய வைத்து விதமாக ஒட்டிலிட்டு மேலோடு மூடி
தாமென்ற முழப் புடத்திலிட்டு வாங்கிச் சங்கு போல் நீறியது தவளமாமே

14. தவளமாம் பற்பமது பணவிடையே தாக்கு சார்வான ஆவின் வெண்ணெய் தன்னில் கொள்ளு
தவளமாய் மேக மொடு உஷ்ண காந்தி தணியாத சூடெரிவு நீர்க் கட்டுச் சிறப்பு
கவளமாய்ப் பவள பற்பஞ் சேர்த்துக் கொள்ளு கல்லடைப்பன் நீரடைப்பன் காச
ரோகங்கள்
தவளமாஞ் சயமீளை தாமாங்கிஷங்கள் தணியாத வியாதி யெல்லாந் தலைந்து போ
மே.

15. போமென்ற தந்த நோய் முப்பத்திரண்டும் போகவே உப்பு மொரு பலந்தான் வாங்
கி
வேமென்று எருக்கம் பால் மேனிச் சாறும் விட்டரைத்து வில்லை தட்டிக் காய வைத்த
ஆமென்று ஒட்டிலிட்டு ஒடு மூடி அப்பனே முளப் பிடத்திலிட்டு வாங்கு
ஆமென்று பொடி செய்து வேறே வைத்து அயப் பொடியுந் தூசு தந்தங் காசுக்
கட்டி.

16. கட்டியொடு கருஞ்சீரகங் கண்டங் கத்திரி விரையோடு களிப்பாக்கு வகை வகைக்கு
ஒட்டியே களஞ்சிடை தான் சமனாய்ச் சேர்த்து உத்தமமே அயக் சுரண்டி தன்னிலிட்டு
அட்டியே வருத்து நன்றாய்க் கல்வத்திலிட்டு அதிரோடு கொட்ட லச்சிக் கரியுஞ் சேர்த்து
யிட்டுமே பொடி செய்து முன் பொடியோடொக்க யிடைப் பாகங் குறையாமல்
சமனாய்ச் சேரே.

17. சேரே நீ கொப்பளிக்க கசாயங் கேளு திறமான கடுக்காயுஞ் சுக்கான் கல்லும்
யேரே நீ முடக் கொற்றான் கருவேலம் பட்டை யெளி தான் நீர் பூலா யிலைதாறைப்
பாரே நீ யிடித்து மொரு பாண்டத்திட்டு பதக்கு நீர் விட்டெரித்து கசாயம் பண்ணி
காபே நீ பொடி யெடுத்துத் தந்த சுத்தி செய்து கசாயத்தை வாத்து நீ கொப்ப
ளித்துப் போடே.

18. போடவே பல்லலைவு தந்த வாய்வு பொல்லாத பல் குத்துப் பல்லரணையுந் தான்
மூடவே பல் புழுவு பல்லுக் கூச்சல் முகவாத சன்னி யொடு தந்த சன்னி
நடியதோர் பல்வாதம் பல்லுளைச்சல் நேத்திர நோய் வேர் வெட்டுச் சொத்தைப்
பல்லு
பாடியதோர் தந்த நோய் முப்பத்திரண்டும் பறந்து போம் பொடியிரட வேகந்
தானே.

19. <u>நிலவாகைச் சூரணம்</u>:-

பாரே நீ நிலவாகைச் சூரணத்தைக் கேளு பரிவாய நிலவாகை கொண்டு வந்து
செப்பே நீ நிழலுலர்த்தி யிடித்துத் தானாய்ச் சிறப்பாகப் பலமே பத்து நிறுத்துக்
கொண்டு
சேரே நீ மிளகோடு கடுக்காய் தானி சீரகமும் வாலுளுவை சிறு நாகப்பூ
காரே நீ யேல மிலவங்கப் பட்டை கடுகுரோகணி சிவதை தாளிச பத்திரியும்
சேரே நீ சாதிக்காய் திரும்பு திப்பிலியும் செவியமிந்தப்புக் கூகை நீரே.

20. நீருமிச் சுக்கோடு வகைக்கொக் கால் பலமும் நிறுத்திடித்து முன் மருந்தோடொக்கச்
சேரு
சேரு நீ பெட்டு வகைச் சூரணமுஞ் சமனாய் சீனி சர்க்கரை பாதி நீ சேர்த்துக்
கொண்டு
தேரு நீ நாளொன்றுக் கந்தி சந்தி நெய் தேனில் வெருகடி தான் குழைத்துக்
கொள்ளு
சேரே நீ மண்டலந்தான் கொள்ளும் போது தீராத நோயேது செப்பக் கேளே.

21. செய்பலே மேகமொடு பித்தம் போகும் தீராத அரோசியொடு வாய் நீறல்
துப்பறவாம் வாய்வோடு காந்தி சூடு சொரி சிரங்கோடு கொள்ளல் மூல
வாய்வு
முப்பொழுது மல சுத்தியாகும் பாரு மூலத்தில் நோயெல்லா முறிந்து போகும்
செப்பாதே வெகு குறுவு யில்லைமொன்று சிவன் வேம்புச் சூரணத்தைச் சொல்லு
றேனே.

<u>சிவன் வேம்புச் சூரணம்</u>:-

22. சொல்லுவேன் சிவன் வேம்பு சூரணத்தைச் செய்து சுசமாகப் பலம் பத்து
நிறுத்துக் கொண்டு
மல்லுறேன் சிவன் வேம்புத் தயிலந் தாறும் வாங்கியே படி யொன்று வேறே
வைத்து
அல்லுவேன் வாலுளுவை தாளிச பத்திரியும் அழகான கிராம்பு ஏலம் அதிமதுரம்
கோஷ்டம்
வல்லுறேன் சாதிக்காய் சாதிபத்திரியும் கருஞ் சீரக மிளகு கடுக்காய் திப்பிலியே.

23. திப்பிலியு மதிவிடயம் பறங்கிப் பட்டை சிறு நாக்கப்பூ வோடு வால் மிளகு தாறும்
யிப்படியே வகை வகைக்கு கால் பலமே ஆக்கி யிடித்து நீ சிவன் வேம்புச்
சூரணத்தோடொக்க
தப்பாத சமபாகம் பசு சீனி சாரித்து ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு
செப்பாதே தினமொன்று வெருகடி அளப்பா சிவன் வேம்புத் தயிலத்தில் குழைத்
துக் கொள்ளே.

24. கொள்ளவே பதினெட்டுக் குட்ட ரோகம் அலைந்தோடு மேக சூலை மேக வாய்வு
கள்ளமாங் கரப்பனொடு சொறி சிரங்கு வெட்டை கடி விஷங்கள் சில் விஷங்கள்
விறவ காந்தி தள்ளியே நோயெல்லா மோடிப் போகும் சொல்லரிது காய சித்தி
சுருக்கு மமத்த
கள்ளமில்லை சொல்லி விட்டோம் சிவனார் வேம்பு கற்பத்துக் காரியாங் கண்டு பாரே.

25. கண்டு பார் குதகத்திலுதிரம் போகக் காலேற்று கை மேலுங் கடுத்துக் குத்தி
சென்று பார் வயத்திலே சோரை தங்கி சீதக் குன்மமாய் வாசிச் சூலையாச்சு
அண்டு பார் சூசிகா வாயுவாக்கு அபானமாங் கருக் குளியமிரங் கட்டி
உண்டு தான் உதிரத்தில் வாய்வு சேர்ந்து உள்ளங் கால் நகங் கண்கள் குத்தலாச்சே.

26. ஆச்சென்று குதக வாய்வு பொல்லான் ஆருந்தான் தீர்க் காரியானப்பா கேளு
பேச்சொன்று கொடிவேலி அமுக்குறா வேர் பெரு மருந்து கோப்பிறண்டை நொச்சி
சங்கு
வேச்சென்ற மாவிலிங்கு மிளகறணை கொறுஞ்சி வெள்ளைச் சாறணை அடம்பு
கண்ணுப்பீளை
ஆச்சென்று நிலஆவாரையிறொடு அப்பனே வகைக்கு வகை பலந்தான் ஆக்கே.

27. ஆக்கியே யிடித்தரைச் சீலை வடி கொண்டு சூரணமாய்ச் செய்தினி மேல் சொல்லக்
கேளு
ஆச்சென்ற வால் மிளகு கடுக்காய் தாளி ஆனைத் திப்பிலி ஓமம் அரத்தை சுக்கு
தாக்கிச்சி பெருங்காயங் கண்ட திப்பிலியும் சதகுப்பை குரோசானி ஓம மூலம்
தா. கவியே சாதிக்காய் கிராம்பு பத்திரி தாளிசை பத்திரியுஞ் சிறு நாகப்பூவே.

28. பூவோடு திப்பிலியும் விடையமாஞ்சி புகழான தேங்காய்ப் பால் விட்டு ஆட்டி
ஆவோடு முன் மருந்தோடொக்கச் சேரு அடுப்பேத்தி சட்டிதனை காய வைத்து
கோபரோடு நல்லெண்ணை படிதான் வாரு கொதிக்கையிலே வெள்ளுள்ளி ரெண்டு
பலம் போடே.

29. போடவே தோல் போக்கி நெரித்துப் போடு புகழான பனைவெல்லம் நாலு
பலம் போடு
ஆட்டவே ஆவின் பால் படி தான் வாரு அப்பனே நுங்கிலிங்கை யரைத்து நன்றாய்
தேடவே தேசிக் காயளவு போடு சேகரித்துக் கிண்டையிலே லேகியம் போலாகும்
சாடியே சூரணத்தைக் கொட்டிக் கொண்டு சம்பா நெல்ப் பொரியதிலே சேரை
போடே.

30. சேரவே போட்டுக் நீ கிண்டி நன்றாய்ச் சேர்த்து மேலகியம் போல் பண்ணிக்
கொண்டு
ஆரே நீ நாளொன்றுக் சந்தி சந்தி அப்பனே கொட்டைப் பாக்களவு கொள்ளு
சேரே நீ வயத்திலே குன்மமேழு சிஷூடயொடு வாமமேழு உதிரமேழு
சோரமென்ற உதிர மெங்கே கட்டி யெங்கே குதக வாய்வு குத்தல் அலைந்து
போச்சே.

31. போச்சென்ற பத்தியந் தான் சொல்லக் கேளு புளியோடு புகையிலையுந் கைப்புத்
தள்ளு
காச்சென்ற சிற வற்றல் வெள்ளாட்டு வற்றல் கணக்காகக் கூட்டுவது அறிந்து கூட்டு

கூச்சென்ற அரைக்கீரை முருங்கைப் பிஞ்சு சூளக் கச்சக் கருவாடு கோளிச் சாறு
ஆச்சென்ற புளிப்பில்லாது வித்துக் கூட்டுஅப்பனே உப்பு தனே வருத்தக் கூட்டே.

.32. கூட்டுவது மருந்து கொள்ளும் போது தள்ளிக் கொண்டு மற பத்தியத்தில் கூட்டி
கொள் நீ

நாட்டியே யின்ன மொன்று சொல்லக் கேளு நலமான வாத மொடு சூலை போகம்
பாட்டியே போக மெல்லா மோடிப் போகப் பறங்கிப் பட்டை ரசயானத்தைப்
பாடுறேனே.

33. அறுகம் வேர்க் கிருதம் :-

1. போமப்பா அறுகம் வேர்க் கிருதம் ஞாலப் புகல விப்டேயின் ஞாலப் புகழ்ந்து
சொல்வேன்

நாமப்பா சொல்லுகிறேம் அறுகின் மூலம் நன்றாக ஒரு பலம் நறுக்கிக் கொண்டு
வாமப்பா யிடித்ததனைப் பாண்டத்திட்டு மகத்தான நாழி படி சலந் விட்டு
ஓமப்பா நாலு படியாகக் காய்ச்சி உத்தமனே வடி கட்டி யிறக்கிக் கொண்டு
தாமப்பா ஆவின் நெய் நாழி விட்டு தடை யறவே மதுப மரைப் பலமுந் தானே.

2. பலமொன்று தாமரை செங்கழுநீர் சீலம் பாச்சுவா யிரு கழஞ்சுமை போலாட்டி
பலமென்ற மாதளையிற் பச்சிலைச் சார் நாழி பிரளாமல் கலக்கியே நெய்யிலிட்டு
சலமென்ன வற்ற மட்டும் கமலம் போலே தீ யெரித்து பதம் வரும் போதறிந்து
கொண்டு

சூலமென்ன மூலத்தி லஸ்தி சூடு கொடி தான கிரிசினங்கள் கிருனி போமே.

3. கிருனி போம் பிரமியமும் கபாலச் சூடும் கிரகிரப்புந் தீருமடா பத்து நாள் கொள்ள
கிருனியா கொண்ட கற்ப முறிவுந் தீரும் சிவனுன் சடை மீதில் தரித்த கற்பம்
பிராணிகளுக்காக யிந்தக் கிருதஞ் சொன்னேன் பிளைக்க வென்றும் செய்து கொண்டு
பெரியோனுவாய் இபானி செலமாதர்களைச் சய் யோகஞ் செய்திடுப் பளவு கடுப்பு
வலியெல்லாம் போபே

4. லோக செந்தூரம் :-

சாமப்பா சலக் களிச்சல் அஞ்சும் போக சாற்றுறேன் லோகமுற்ற செந்தூரந்
தன்னை

நாமப்பா கண்டபடி சுருக்கங் கேளு நல்ல பழச் சீலை சாத்தி லன்பப் பொடியைப்
போடே

போட்டந்தக் கற் கலுவியே பவியிற் போடு புகழாக உலர்ந்த பின்பு நில்வப்பட்டை
ஆட்டதனைப் பிழிந்து யிந்த அரைப் பொடியிற் சேர்த்து அப்பனே சுவறு மட்டும்
பவியிற் பேர்டு

நாட்டதனை மூன்று திப மிப்படியே செய்ய நலமான செந்தூரம் மாகு மாகும்
கூட்டதனை ஆவரையின் சர்ளாட்டி கோவில சீலை வடி கொண்டிடாயே.

5. வடி கொண்ட நாளிலே வராகன் மூன்று மகத்தான செந்தூரம் பந்தான் மூன்று
வடி கொண்ட தேனிலையைக் கசாயத் தாட்டு மைந்தனே கசாயத்தின் மருந்தைக் கே
வடி கொண்ட கழல் மனியும் வெள்ளுள்ளி கடுக்காய் வசம்பு தேறுடன் சுக்கோடாறு
வடிகொண்டு யெட்டொன்றாய்க் கொள்ளச் சொல்லு மைந்தனே சூரனக் கசாயம்
கேளே.

6. கேளப்பா சலக் களிச்சலனைத்தும் போகும் கெடியான கடல் சூஞ்சிப் பட்டை தாறு
ம்

நாளப்பா பல மூன்றே முக்காலாகும் நலமான ஆவரைக் கோலம் மூன்றே முக்கால்
ஆகும்

நீளப்பா பலமஞ்சு கருங்காலிப் பட்டை நெஞ்சு பலந் நாக்கே கட்டு கொடி சமூலம்
தாளப்பா கடுக்காய் தால் பலம் நாலாகும் தானிக்காய் பழிவேந்து பத்து தக்கது
வாங்கே.

7. தக்கதிடு வா யிரண்டறை தாவ் பலந் தானப்பா சாதிக்கா யின்ன சேத்து
நாளாயாக

சூத்த திடுவா யிரு நாழி செலுத்தைக் காச் சாரவாக எட்டொன்றாய் சுருக்கி
நன்றாய்

தடுத்திடுவாய் பெட்டு சூத்து சூரணத்தை வாரிச் சாப்பிடவே யிரு நேரம் சென்று
மகத்தான தகத்

தகத்திடுமே சலக் களிச்சல் மாறும் நல்ல முழுகத் தயில மொன்று சாத்தக் கேளே

8. குமட்டிக்காய் பதங்கம் :-

கூறயே குமட்டிக்காய் பதங்கஞ் சொல்லுவன் கூறிய தோர் வாத மென்பதுந்தான்
போக

கூறவே அகில் பட்டை தருதாழை தானும் கொடிவேலி பாவட்டை அமுக்கிறு வேர்
மூட வெண் சாரணையுஞ் சத்தி சாரணையுடக் கொத்தான் கீளையும் பெருவா
கை

சடைச்சி தேரியேதை லேனை

மாரி விடு மவு.ரியொடு வில்வேலை வேரு மாவுலிங்கம் வலக வகைக்குப் பலந்தாறென்றே.

9. ஒன்றுக யிலை யெல்லாஞ்சூறமே செய்து உத்தமனே கண்ட திப்பிலி சிராம்பு ஓமம்
திண்டான வால்மிளகு தாளிச பத்திரியும் கிப்பிலியும் வாயுரலை திப்பிலி மூலம்
அண்டான சதகுப்பை பறங்கிப் பட்டை யரத்தை சுக்கு அதிவிடையஞ் சிறு நாகப்
பூவே.

10. பூவான கருஞ்சீரகம் வகைக்கு நாற் களஞ்சி பொடித்து நீ முன் மருந்தோடொக்கச்
சேரு
தேவோடு கல்வத்திலிட்டுக் கேரு திருகு கள்ளிப் பாலோடு உத்தா மணிச் சாறு
பார்வோடு வாத்தனை யரைத்தலத்தி பக்குவமாய்ப் பேய்க்குமட்டிக் காய் தான்
கேரு
கேர்வோடு வேண்டியது கொண்டு வந்து குடைந்துள்ளே விரையோடு சதையும்
போக்கே.

11. போக்கியே மருந் தெல்லாங் காயினுள்ளே புகட்டி யந்த தோட்டாலே மேலே
மூடி
மேக்கியே பாண்டத் திலிட்டு நீயும் மேல் மூடிச் சீலை செய்து குழி தான் வெட்டி
கேட்கவே வெள்ளாட்டுப் புழுக்கை மைந்தா கீழ் மேல விட்டு நடுப் பாண்டம்
வைத்து
பாக்கியே புடம் போட்டு ஆற விட்டுப் பாரு பக்குவமாங் காயெல்லாங் சிவந்து
காணே.

12. காணுவது கருகாம லிப்பால் வாங்கிக் காயெல்லா மாற விட்டு மருந்தைக்
கொட்டி
பேணியே குங்குமப்பூ சாதிக்காயும் போட்டு நீ பொடி செய்து வைத்துக் கொள்ளு
ஆறுவது வெருகடி தா எந்தி சந்தி அப்பனே மூன்று நாளாறு நாள்க் கொள்ளு
காணுவது வியிவல் தான் நிறுத்திப் பொடு கலங்காதே எருமை மோர்
சோறுமுண்ணே.

13. உள்ளவே வாத மெல்லா மோடிப் போகும் உத்தமனே கைப்பு, புளி புகையுந்
தள்ளு
மன்னியே வாதத்துக் காகா தெல்லாம் மைந்தனே தள்ளு மற்ற திச்சா பத்தியம்
கன்னமது உப்பதனை வறுத்துக் கூட்டு கண் காணதோடு படா வாத சூலை
ஒன்றுவத் காலு கை முடக்கிருப்பு வாதம் உத்தமனே பச்ச வாத மோடும் பாரே.

14. <u>அண்ட வாதத்துக்கு</u>:-

கருஞ் சீரகமும் வெள்ளைப் பூடும், தேனிலே அரைத்துக் கொண்டால் அண்ட வாதந் தீரும்.

<u>ரெத்த காசத்துக்கு</u>:-

கொத்தமல்லி கசாயம் வைத்து சீனி சர்க்கரை வெருகடி பிரமாணம் போட்டுச் சாப்பிட ரெத்த காசந் தீரும். தேங்காய்ப் பால் புங்கம் வேர்ப் பால் ஒரிலைத் தாமரை இது மூன்றும் அரைத்து மூன்று நாள் கொடுக்க வெட்டை தீரும். கோழியவரைச் சாறு 6 விராகனிடை மிளகு எருமை மோர் விட்டுப் பிழிந்து மிளகு, அரைத்து அதில் குழப்பி 3 வேளை கொடுக்க மேகம், கிரந்தி, மேக சிரங்கு தீரும். பத்தியம் புளி தள்ளுபட.

<u>தாது விருத்திக்கு</u>:-

தாது நஷ்டமானவர்க்குத் தாது விர்த்தியுண்டாக தாது விர்த்தி லேகியத் தைச் சாற்றக் கேள்.

வார்த்முகமான கோரக்கர் மூலி கொடி கொடிய பறங்கிப் பட்டை
பார்க்க மூன்றும் பல மூன்று சீரகமாம் சன்ன லவங்கம் கோரோசனை ஓமம் சாதிக் காய், நாட்டு மிளகு, சிறுநாகப்பூ, வாட்டுங் கசகசா கோஷ்டம், சிராம்பு, கொத்தமல்லி, கைய்யான், திரு நீற்று பச்சை நாவிலப் பலைக் கிழங்கு, நீர்முள்ளி யுசிலில்லா சாதிபத்திரி, லவமுடன் தாளிச பத்திரியு மிதகமாம் நீர் முள்ளியின் பருப்பு சதளமாம் யிங்கிலை தான் வகைக்கு கால் பலமாம் சொன்னேன் யிலை யிடித்து திராக்ஷி பின்னையுந் தாறுவின் வெற்றிலைச் சால நயந் தேன் விட்டு தினங் களஞ்சி கொண்டு வரத் தான் கட்டுஞ் சுக்கிலத்தை தப்பிக்கி நாட்டும் போது கை யிருப்பு வலி சாபாது பலத்த கிருமி கட்டும் வாதம் அய்யம் அத்தனையும் வாபாது சீத சலதோஷந் மொளிந்தோடும் சரீர மிருது மெய் கடுப்பு வலி சாபாது குருவே தனை உண்டாகவும்.

தேத்தாங் கொட்டை படி.க, பசுவின் கீருக்கிடாரி மாட்டுக் கோமியத் தில் கூட ஒரு பாண்டத்தில் போட்டு சில்லுப் போட்டு பூமி புடமாய் ஆறு நாள் வைத்து ஏழா நாளெடுத்துக் கழுவிப் போட்டு ஆவின் பால் விட்டு அரைத்து வால்மிளகு, பலம்.உ, சீரகம் பலம்.4, சர்க்கரை பலம்.3, சுபனித்துப் பசுவின் நெய் விட்டு லேகியமாய்க் கிண்டி ஒரு களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும்: அவ பத்தியந் தவிர்க்கவும். தாது விருத்தியுண்டாகும்.

கொள்ளுதற்கு யின்னமொரு கருமானங் கேள் கூர்மையுள்ள தாது புஷ்டி தான் தாளுக
நல்லுரவா யுண்டு வந்த குணத்தைக் கேளு நலமான ஆவிரட பாலிலே தான்
தள்ளுகிற நெரிஞ்சிப் பூ முருங்கைப் பூவும் அப்படியாய் பால் விட்டுக் காச்சி மைந்தா
செல்லுதற்கு கல்கண்டு பொடித்துப் போட்டு சில சில உதையத்தில் புசித்திடாயே.

புசித்திடுவா யீறாறு தினமு மைந்தா பூரணமாம் தாது வது புஷ்டியாகும்
புசித்த தொரு தேகமது சித்தியாகும் மன்மதனும் மதிக் கலிப்லா வுண்டாகும்
நசித்த தொரு நீர்க் கடுப்பு வெட்டை தீரும் நடுவான விந்துவது சொலிக்கும் பாரு
விசுத்தியின் மேல் ஆக்கினையாம் புருவ மீதில் வேதாந்த கற்பூர தீபம் பாரே.

<u>ஊர்க் குருவி லேகியம்: வீரிய விருத்திக்கு:-</u>

1. உண்டிடா யூர்க் குருவி குட லெடு தன்டிடாய் லவங்கஞ் சாதிக்காய் பின்
விண்டிடாய் வகைக்கு விராகனிடை கண்டிடாய் மதன் மைக் மலர் சேர்த்திடே.

2. சேர்த்திடு களஞ்சியிட்ட காலது யெத்திடு யிவை யெல்லா மரைத்துடன்
கோர்த்திடுங் குருவுக் குள்ளே வைத்து வாய் போத்திடு நெய்யிற் போட்டு பொரித்தி
டே.

3. பொரித்தெலும்புபயும் போக்கி மெழுகெனக் குறித் தரைத் தொரு குன்றி போல்
வாங்கி யுள்
நீர்த்த நாளிரு நேப மூவேளு நாள் விரித்த மன்மத வீரியங் கண்டிடே.

4. கண்டிடா யிங் கன்னி தலைச் சுத முண்டாட்டா திருவுந்தியின் வோது
கொண்டடா நற் குளிந் ஈ பங் கொடு தண்டடடா யிடை தன்னிலிருக்கிடே.

5. இருக்கும் பெண்களை யீரைந்து நாளிகை பொறுக்கும் புள் கட்டுலக்கையை தாகிடும்
பெருக்கும் வித்துப் பிரகாரிப் பெற் கரு பொருக்கும் காமம் பொழியும் பின்னேரலே.

6. யேர நிலப்பனையின் கிழங்கோர் பலம் வேர் நுன்னி விட்டான் கிழங்கோர் பலம்
தேரே நெருஞ்சி வேர் சேர்த்திட் டொரு பலம் பாரரைத் தாவின் பாலுளக் கூட்டி
டே.

7. கூட்டு மான் கொம்பு கொதித்துடனே மூட்டுரித்த முளைத்தக் குடித்திடில்
காட்டு வீரியங் கை கண்ட திம் முறை மாட்டு லக்கையா மல் குவிற் கண்டிடே.

8. காப நற் சாதிக்காய் லவங்க மல்லா நேப்ருக்த பினி யதின் வித்துடன்
மாறன் புஷ்பம் வகைக்கு களஞ்சிடை பாரச் சூதம் பணவிடை யொன்றுதே.

9. ஒன்று ஆட்டி ஓங் படல் தோலெடு தன்டப் பாலைத்தறப்பு வாய் தைத்துடன்
விட்ட ஆவின் நெய் விட்டுப் பதத்தினில் கண்டப் பா பொரித்துக் காத் தெடுத்திடே.

10. யெடுத்திடு யெழும் பெல்லா மகத்துடனே தொடுத்திடு கல்வத்துள் வைத்தெடு
கொடுத்திடு சிறு குன்றி போல் நெய்யினில் அடுத்திடு விந்து கலாதிருக்குமே.

11. யிருக்குங் கிருமி யிபன் காதரிவையர் ஒருக்குமல் குலினா லலக்கையாம்
பெருக்கும் போகம் மொழியும் வெண்ணீர் விடல் வெருக்கு மாதர் விடாளிது உண்டாதே

<u>அசுவ கெந்தி லேகியம்:-</u>

கிராம்பு விராகனிடை.க, சிறு நாகப்பூ விராகனிடை.க, ஏலம் விராகனிடை.
சன்ன லவங்கம் விராகனிடை.4, சாதிபத்திரி விராகனிடை.5, சீரகம் விராகனிடை.6
கொத்தமல்லி விராகனிடை.7, மிளகு விராகனிடை.8, திப்பிலி விராகனிடை.16,
சுக்கு விராகனிடை.31, அசுவ கெந்தி விராகனிடை.64, சர்க்கரை கும்க் ரெண்டு
சம்ன் பால் படி.க, நெய் படி $\frac{1}{4}$ தேன் படி.$\frac{1}{4}$. தீரும் வியாதி கூட்டியே லேகியந்
தான் கொட்டைப் பாக்களவில் கொள்ளும் போது குலமான அரோசிகம் கூரும் காசம்
வாட்டமுள்ள ரெத்த பித்தம் அன்ன துவேசம் வாயுவரு மருந்தீடு வள்ளி மந்தம் தேட்டமுள்ள
குமரகண்டம் சுவாச காசம் தேகத்தில் வந்த தொரு தொந்த நோயும் நாட்டமுள்ள
பளந்திரம் போலே பறமு மாகும். நல்ல அசுவ கெந்தி யென்று நவிலலாமே.

<u>பேதிச் சூரணம்:-</u>

ஓமம் பலம்.உ, கடுக்காய்த் தோல் பலம்.3, சுக்கு பலம்.$\frac{1}{2}$, அரிசி
திப்பிலி $\frac{1}{4}$ பெருங்காயம் விராகனிடை.க, வாளப் பருப்பு பலம்.க, இதுகள் இடித்து
வடிகட்டிக் கொண்டு நீராகாரத் தண்ணீரில் இந்தப் பொடியில் $\frac{1}{4}$ போட்டுக் கலந்து
கொடுக்கவும். பேதியாகும். மிளகு நீர் சாதம் சாப்பிடவும். சரீரம் சுகப்படும்.

மறந்து மதி போகாமல் மைந்தா கேளு வாராத வியாதிகள் தான் வந்தா தாலும்
சிறந்த கரு அண்ட மதின் தோடு வாங்கி சில சிலா தண்ணீரில் முப்பு சேர்த்து
பிறந்த அண்டத் தோட்டினைச் சுத்தி பண்ணி பெருமையுடன் தானெடுத்துக் கல்வத்திட்டு
பறந்து விடுங் கெந்தகத்தைப் பத்துக் கொண்டு பாச்சி நன்றாய் செய்நீரில் அரைத்திடாயே

2. அரைத்து நன்று யுருட்டி யதை வட்டுப் பண்ணி அப்பனே புடம் போட வெந்த நீறும்
திடத்துடனே அதை யெடுத்து வைத்துக் கொண்டு சிலசிலா அந்தி சந்தி கொண்டு தேற

வெறித்த பித்த குட்டுடனே கபால குடு மேலான நேத்திரத்தில் நின்ற குடு
உரத்துடனே நின்ற தொரு வாயு வெல்லாம் ஓ முடிந்து போமடா உண்மை பாரே.

3. உண்மையுட னின்ன மொன்று சாத்தக் கேளு உருசையுள்ள பசுவின் நெய் படி காமென்று
நன்மையுள்ள வால் மிளகு பலந்தான் ரெண்டு நடுவான நீர்கூழல் ஆட்டிக் கொண்டு
தன்மை பெற அன்னத்தில் கரைத்து மைந்தா தான் பசுவி நெய் யோடே சேர்த்து மைந்தா
செம்மையுடன் அடுப் பேத்திப் பதத்திலே தான் செயமான நெய்யதனை வடித்துக் கொள்ளே.

4. வடித்து மிக யெடுத்து நன்றாய் வாரந் தோறும் வரிசையுடன் முழுகி வரக் கூடைக் கேளு
இடித்து வருங் கபால வலி நயன் குடு இருமலொடு வாயுவுங் கூடும் யெடு பட்டோடும்
அடுத்த தொரு நெஞ்செரிவு அகன்று போகும் அண்ட மேறும் பற்பத்தால் அகன்று தய்யா
தொடுத்த தொரு தயில மொடு பற்பம் பண்ண சுகமான வாலையை நீ பூசை பண்ணே.

5. <u>வல்லாதி லேகியம்</u>:-

~~கொள்ளவே-சொல்லுகிறேன்-பறங்கிப்-பட்டை-குருகப்பல்-அஞ்சு-சீனி-யஞ்சு~~
கொள்ளவே சொல்லுகிறேன்_சொல்லுகிறேன். பறங்கிப் பட்டை குருகப் பலம் அஞ்சு சீனி யஞ்சு
அள்ளவே முப்பிரண்டை அசுலம் சங்கு அழகாகும் கொடிவேலி பலம் வகைக்கிரண்டு
மெல்லவே தானிடித்துச் சூரணித்து விதமாகச் சோறும்பை யீரவும் கால் தான்
கள்ளமாய்ச் சேர்ந்த பின்பு சட்டி ஒன்று காய வைத்து நெய் படி தான் ஒன்று விட்டு
கொள்ளவைக்குஞ் சேங்கொட்டை பல்மே ஒன்று குமிளெடுத்துத் தான் போட்டுக் கொதிக்க வைத்து
பள்ளனம் போல் நஞ்சு வெளி வந்த பின்பு பாங்காகக் கொட்டை நறை யெடுத்துப் போட்டு
செள்ளமறச் சூரணத்தைப் போட்டுக் கிண்டி திறமாக நீ யிறக்கிக் கொண்டு வைத்து
வல்லல் விநாயகனைப் பூசை செய்து வாகாக உருகியாய்க் கொள்ளும் போது
உத்த தொரு கிறந்தி ஆற சூலை ரோகம் ஒளியாத வெட்டை பிரமியங்கள்
மெத்தனவே மேகத்தின் ஊறல் போகும் விதன முதல் புள் புரைகள் தடிப்புப் போகும்
கைத்திறமாய்ச் சொல்லி விட்டேன் வீரிய முண்டாகும் கருவாக யென் மருந்தை செய்து பாரே.

<u>பீனிசத்துக்கு எண்ணை</u>:-

நல்லெண்ணை படி.க, இஞ்சிச் சாறு, நொச்சிச் சாறு, துளசிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, வெற்றிலைச் சாறு, கற்பூர வள்ளிச் சாறு, கஞ்சாங் கோரைச் சாறு, சாறணை இலைச் சாறு வகைக்குச் சாறு படி. 1/8. கடை மருந்து யேலம், லவங்கப் பட்டை, தேவதாரம், விலாமிச்சம் வேர் வெட்டி வேர், செண்பகப்பூ, சாதிக்காய், அரத்தை, வாய் விளங்கம் வகைக்கு விராகனிடை.க இந்தச் சரக்கை யெல்லாம் மெழுகு போல் அரைத்து எண்ணெயில் போட்டுக் கனிக் கலக்கி கணபதி பூசை செய்து அடுப்பேத்தி மூன்று நாள் சிறு தீயாய் யெரித்து ஊறவிட்டு நாலா நாள் மெழுகு பதத்தில் வடித்து நாலு நாளைக் கொருக்கால் முழுகி வரவும். அரப்பு, சீயக்காய் தேய்த்துக் கொள்ளவும். இதுக்குச் சகல பீனிசமும் தீர்ந்து போகும்.

<u>உள்ளுக்குக் கொடுக்க மருந்து</u>:-

எலுமிச்சம் பழச் சாறு படி.¼, கய்யாந்தகரைச் சாறு படி.¼, மிளகு பத்து உப்பு.க, கூட்டிப் பொடி பண்ணிப் போட்டுக் காய்ச்சி உள்ளுக்கு மூன்று நாள் கொடுக்கவும். உள்ளே யிருக்கும் வாய்வு முதலானதுந் தீர்ந்து போகும்.

<u>அரிசி பற்பம்</u>:-

அரிசி விராகனிடை.3, ஆடு தின்னாப் பாளைச் சாற்றில் ஒரு தினம் ஊறப் போட்டு அதை எடுத்து குப்பை மேனிச் சாக்கை மேலே தடவி ரவியில் உலர வைத்துக் கொண்டு வெள் வெங்கத்தை உருக்கி மேல்ச் சொன்ன அரிசியை அதில் போட்டு அடுக்கிப் பிரட்டி மேல்க் கலசமாய் சுத்தம்படியாய் யெடுத்துப் பூமியில் போட்டு மேலே மண்ணை மூடி நாலஞ்சு நாழிகை சென்ற பின்பு யெடுத்து வீரம் ரெட்டிப்பு சேர்த்து எருக்கம் பால் விட்டு மெழுகு பதமாய் அரைத்து தாம்பரத்து சல்லிக்கு கவசங் கட்டி ஓட்டில் வைத்துச் சீலை மண் செய்து கெசபுடம் போடப் பற்பமாம். அந்த வியாதி தெரிந்து அநுபானம் சேர்த்துக் கொடுக்கவும். குஷ்டம், குன்ம வாய்வு, இவைத்தொரு மேகமுந் தீரும்.

நீரிழிவுக்கு கிருமிக் கழிச்சலுக்கு :-

ஆனை நெருஞ்சியைச் சமூலங் கொண்டு வந்து அலைத்துக் கால் படி சாறு பிழிந்து கொண்டு அதில் பொரிகாரம் நெருப்பில் பொரித்து சாற்றில் கலந்து கொண்டு மூன்று நாள் சாப்பிட்டு கைப்பு, புளிப்பு தள்ளுபட. எலுமிச்சம் பழம், சாதிக்காய், கிராம்பு, ஏலம், லவங்கப் பத்திரி, இந்த சரக்குகளை பொடி பண்ணி மேற்படி எலுமிச்சம் பழத்தில் அடைத்துச் சீலை மண் செய்து காந்தலில் வைத்து மண் கருக வேக வைத்து தண்ணீர் வார்த்து அரைத்து எருமைத் தயிரிலே மூன்று பொழுது சாப்பிடக் கிருமி ரோகந் தீரும்.

மூக்கில் ரெத்தம் பீனிசத்துக்கு நசியம் :-

அறுகம் வேர் இரண்டு பிடி கழுவி தள்ளி தட்டி நசுக்கிக் கொண்டு முலைப்பால் விட்டு ஒரு நாழி ஊற வைத்து பின்பு பிழிந்து கொண்டு மாதம் பூர சத்தை சமனாய் விட்டு பசு வெண்ணை பலம்.க, போட்டு பதமா யிறக்கு பதத்தில் குங்குமப்பூ விராகனிடை.½ தூள் பண்ணிக் கொண்டு அதைப் போட்டு இறக்கிக் கொண்டு தெளிஞ்ச பின்பு மூன்று வேளை நசிய மிடத் தீர்ந்து போகும்.

காது குத்தலுக்கு என்னை :-

ஒரு கரண்டியில் கொஞ்சம் நல்லெண்ணை விட்டு ஒரு பலம் பூண்டு நசுக்கி எண்ணை காய்ந்த பின் கற்பூரம் இரண்டு கொத்தமல்லி பிரமாணம் போட்டுக் காய்ச்சி கொண்டு பிற்பாடு அபின் கொத்தமல்லிப் பிரமாணம் போட்டுக் காய்ச்சிக் கொண்டு இளஞ் சூடாய் காதில் ஊத்தி அடைக்கவும். காது வலி தீரும்.

விஷத்துக்கு :-

மத்த மகிழ் தன்னுடன் அளிஞ்சி நேர் வாளமும் வளர் தில்லை வெண் குன்றியும்
வகையாறு வித்துடன் மனோசிலை நெரிவிஷம் வளர் செவுரி அரிதாரமும்
சித்த மகிழ் பொன் மெழுகு பச்சை நாபி தெசம் செயமான தூரிசி லிங்கம்
செயவுதவு கெந்தியொடு திரிகடுகு வெண்காரம் சிதராத நமச்சாரமும்
துத்தமொடு சீனமும் வங்காளப் பச்சையும் தடியான பழச் சாற்றினால்
அலங்கு சமன் சேர்த்து சாமமரைத்து நீர் சுலராக பறணி யிலடைத்து
கொதகதி ஒரு பணவிடை குடோரி யிட்டால் விஷம் சொடி கட்டி மிழக்கலாகும்
கொள்ள ஒரு பணவிடை வெத்திலையி லீந்திடக் கொடிய பல விஷ மீருமே.

சுவாச காசம் மந்தார காசம் இதுகளுக்கு அவிழ்தம் செய்யு முறை :-

ஒரு படி பசுவின் நெய்யில் வௌவால் கொண்டு வந்து தலை அறுத்து தள்ளிப் போட்டு காலும் அறுத்துத் தள்ளிப் போட்டு வயத்தைக் கீறி குடலையும் பிச்சுக்களும் எடுத்து நெய்யிலே போட்டு நீர் சுண்டி பின்பு கோரோசனத்தை விராகனிடை.க, பொடி பண்ணிப் போட்டு இறக்கிக் கொண்டு சிறு கரண்டிப் பிரமாணம் சாப்பிட வியாதி தீர்ந்து போகும்.

க்ஷயம் குன்ம அடைக்கு முறை :-

கற்பூர சிலாசத்து விராகனிடை.உ, வீரம் விராகனிடை.உ, இந்த இரண்டையும் குமரிச் சாறு விட்டு அரைத்து நன்றாய் மெழுகான பின்பு சின்ன கலையத்தில் மேற்படி வில்லையை அதுக்குள்ளே போட்டு மேலோடு மூடி சீலை மண் செய்து சாணி விருட்டியில் புடம் போட்டு அரிசி பிரமாணம் தேனிலே கொடுக்க குன்மம் தீர்ந்து போகும். க்ஷயம் தீரும்.

தாம்பிர பற்பம் :-

தாம்பிரம் அரப் பொடி ராவிக் கொண்டு கேசரி நீர் விட்டு.உ சாமம் அரைத்து கழுவிக் கொண்டு சமனிடை சித்தண்ட ஓடு சேர்த்து வேலிப் பருத்திச் சாறு விட்டு 6 சாமமரைத்து சிறு வில்லையாகக் கட்டி காட்டு விராட்டியில் ௭ சபுடம் போட்டு குன்மத்துக்கு இஞ்சி லேகியத்தில் கொடுக்கவும். நீரிழிவுக்கு நெய்தி, தேன் அநுபானம் பண்ணிக் கொடுக்கவும். வில்லை வைக்கிற யிடத்தில் கீழு மேலும் காட்டெருவு கொட்டவும்.

இருமலுக்கு :-

பசு நெய் ஒரு படிக்கு நத்தை மாமிசம் பலம்.8 போட்டு பதமாய் காய்ச்சி இறக்கிக் கொண்டு மாமிசத்தை எடுத்து போட்டு பின்பு ஒரு விராகனிடை கோரோசனம் தூள் பண்ணிப் போட்டு சின்னக் கரண்டி பிரமாணம் அந்தி, சந்தி இரண்டு வேளையும் சாப்பிடவும். இருமல் காசம் தீரும்.

பிள்ளைகளுக்கு அடி தள்ளி யிருந்து ரெத்தம் கண்டால் மருந்து :-

வெந்தயம் பலம்.க, பசுவின் பால் படியிலூறப் போட்டு அரைத்து வெல்லம் பலம்.க, நெய் பலம்.க, சேர்த்து லேகியமாய்க் கிண்டிக் கொடுக்கவும். சவுக்கியமாம்.

மண்டை யிடி, நேத்திர குடு, மூத்திரம் ரெத்தம் போல் போகிறதுக்கு முகண்ட சிந்தாமணி த்யிலம் :-

அறுகம் வேர் பலம்.15, தண்ணீர் படி 8 விட்டு.க படியாய்க் காய்ச்சி சின்ன படி ஒரு படி எண்ணெயில் விட்டு கோஉட்டம் வெட்டி வேர் கார்போகரிசி வகைக்கு விராகனிடை.1½-அக அரைத்துப் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுகவும்.

<u>கடுக்காய் லேகியம்</u>:-

வாருன கடுக்காயின் லேகியத்தை வளமாகச் சொல்லுகிறேன் மக்காள் கேளு
பாருன கடுக்காயின் கொட்டை போக்கி பலம் பத்துச் சிவதை வேர் பலந்தான் ரெண்டு வகைக்கு ரெண்டு
காரான நிலாவாரை பலந்தான் ரெண்டு காக்கியே யிடித் தொன்றாய்ச் சூரணமே செய்து
சீருன கடுகுரோகணி கிராம்பு, திப்பிலி சிறு நாகப்பூவோடு வாலுளுவை சீந்தில்
சிங்கியொடு கருஞ்சீரக மிளகு சிறப்பான கொத்தமல்லி தாளிசி பத்திரியும்
பாங்கியே வகை வகைக்கு.கால் பலமே தாக்கு யிடித்துமே வடி கொண்டு முன் மருந்தில் சேரு
தாங்கியே ஆவின் நெய் தானும் விட்டு சர்க்கரையும் போட்டு நீ லேகியமாய்ப் பண்ணே.

பண்ணியே நாளொன்றுக் கந்தி சந்தி பருங் கொட்டைப் பாக்களவு கொண்டாயானால்
திண்ணியே தீரும் நோய் சொல்லக் கேளு சலக் கட்டு மலக்.கட்டுக் கோழைக் கட்டு
உண்ணியே உஷ்ண காந்தி மேகக் காந்தி உள்ளங் கால் கை யெரிவு சூலை யெரிவு பட்டால்
யெண்ணியே மூலத்தில் சூடு காந்தி யீளை யிருமல் புகைச்சல் வறட்சி சோகை
யெண்ணியே பத்தியமா யுண்டு தேற யிதை விட்டால் கற்பம் வேறுண்டோ சொல்லே.

<u>இஞ்சி லேகியம்</u>:-

சொல்லவே யிஞ்சி லேகியந்தைக் கேளு தோல் போக்கிப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
மள்ளவே பழச் சாத்தாலாட்டி மை போல் மைந்தனே சட்டியிலே யிட்டுக் கேளு
அல்லவே சீரக மிளகோடேலம் அதிமதுரந் திப்பிலியுங் கோஉட்ட மூலம்
கள்ளவே வாலுளுவை தாளிச பத்திரியும் கடுகோடு கொத்தமல்லி சித்திர மூலம்
அல்லவே சிங்கியொடு குரோசாணி ஓமம் அப்பனே வகை வகைக்கு அரைப் பலந்தான் தாக்கே.

தாக்கியே குரிசாலை புலரசம் பட்டைச் சாத்தால் துவள வரைத்து முன் மருந்தோடொக்கச் சேரு
ஐக்கமாய்ப் பிறண்டையது மோரிலுப்பிட்டுறி உலர்ந்திடித்து ஒரு பலமே போடு போடு
ஆக்கவே வங்காள சீனியப்பா அதிற் பாதி போட்டாவின் நெய்யை வாரே.
நெய் வார்த்து லேகியம் போல் பண்ணிக் கொண்டு நேரமொரு பாக்களவு கொள்ளும் போது
பொய்யல்ல பித்த வாய்வு உஷ்ண காந்தி பிறட்டல் சக்தி வலி குன்மம் பித்த குன்மம்
மெய்யான அஸ்தி சுரம் சன்னி தோஉஷம் வீறன யெரி குன்மம் அசீரண வாய்வு வாதஞ்
செய்யவே உப்பிசமும் அரோசியமும் தீருமே தீவனமாம் பசி யறிந்து சீராய்ச் செய்யே.

<u>அயகாந்த லோக செந்தூரம்</u>:-

அயம் பலம்.உ, காந்தம் பலம்.உ, ரசம் பலம்.உ, கெந்தகம் பலம்.உ, வெங்காரம் பலம்.க, அயத்துக்கு நல்லெண்ணெயிலும் பழச் சாத்திலும் சுத்தி காந்தம் கொள்ளுலே சுத்தி. கெந்தகம் குட்டிக் தக்காளிச் சாறு, கத்தாழைச் சாறு பாலு இந்த மூன்றிலும் சுத்தி. ரசத்துக்கு மஞ்சள் ஆகாசந் தாள், செங்க மாவில் சுத்தி வெங்காரம் செங்கீரை தண்டுச் சாறில் போட்டு ரவியில் காயச் சுத்தி. இந்தப் படி சுத்தி செய்து ஒரு சாறில் நாலு சாமம் அரைப்பு, அகல வில்லை தட்டிக் காய வைத்து சட்டியில் வைத்து மேல் சட்டி மூடி சீலை செய்து அடுப்பேத்தி யெட்டு சாமம் எரிக்கவும். எடுத்துப் பொடி பண்ணி சீசாவில் அடைக்கவும். பித்த ரோகங்களுக்கு விடத் தேரையிலை யரைத்துக் கொடுக்கவும். நெய்யில் தேனில் கொடுக்கவும்.

<u>ரூச பதங்கம்</u>:-

ஒட்டுக் காந்தம் அரிதாரம், லிங்கம், மனோசிலை இந்த நாலும் சமனிடை வீரம் பலம்¼ இத்தனையும் சுத்தி செய்து அண்டக் கருவிட்டு அரைத்து குகை பண்ணி ஒரு பலம் ரசம் சுத்தி செய்து விட்டு சட்டியி லுப்புக் கொட்டிக் குகை வைத்து மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து அடுப் பேத்தி 9 சாமம் யெரித்துப் பதங்க மெடுக்கவும். சூலை, அரையாப்பு, பக்க வாதம், வாய்வு இதுக்கு வெல்லத்திலும் விடத் தேரையிலும் கொடுக்கவும்.

<u>தலைப் பொடுக்கு</u>:-

போடப்பா பொடுவுக்கு மருந்து கேளு பண்ணியமே செயமாகும் புவியுள்ளோர்க்கு
நாடப்பா நல்லெண்ணை நாழி கூட்டி நற் குமரிப் பாலினிலே சித்திர மூலம்
தேடப்பா விட்டரைத்து மெழுகாம் போது நீ யெரித்து யெண்ணை தனை வடித்து மூழ்க
ஆடப்பா அரைப்பிட்டுச் சாயங்காலம் அரையளவு சலத்தினில் நீராடுவாயே.

குமட்டி மெழுகு:- 4.4.64.

பேய்க் குமட்டிக்காய் சாறு படி.$\frac{1}{4}$, எலுமிச்சம் பழச் சாறு படி.$\frac{1}{4}$, வெள்ளைப் பூண்டு தயிலம் படி.$\frac{1}{4}$, நொச்சியிலைச் சாறு படி.$\frac{1}{4}$, இஞ்சிச் சாறு படி.$\frac{1}{4}$, பூரம் விராகனிடை.உ, வெங்காரம் விராகனிடை.உ, லிங்கம் விராகனிடை.உ, பெருங்காயம் விராகனிடை.உ, இந்துப்பு விராகனிடை.உ, ஓமம் விராகனிடை.உ. வெந்தயம் விராகனிடை.உ, கறி மஞ்சள் விராகனிடை.உ, மிளகு விராகனிடை.உ, சாந்தம் விராகனிடை.உ, நேர்வாளம் விராகனிடை.உ, கடுகுரோகணி விராகனிடை.உ, முன் சாறு விட்டு அரைத்து அடுப்பில் வைத்து பழம் புளி போலிறக்கிக் கொண்டு பனை வெல்லத்திலாவது நல்ல வெல்லத்திலாவது அரை விளங்காய்ப் பிரமாணம் கொடுக்கவும். தீரும் வியாதி குன்மம், பெருவயறு, நீராமை கட்டி மகோதரம், பீலிகை வாய்வு, வெப்பு பாலை நீர்க் கோர்வை, வலிய முக்கும் களைசைக் கட்டி யெல்லா வாய்வுந் தீரும். வாய்வு பதார்த்தம் தள்ளுபடி. லேகியம் சாப்பிடவும் வெந்நீர் சாப்பிடவும். குமட்டிக் காயை வரவு வைக்கல் சுட்டு பிழியவும்.

குதக வலிக்கு லிங்க பற்பம்:-

1. அல்லவே யெருக்கம் பாலரைப் படி வெல்லவே லிங்க மிடை பலமொன்று தான்
சொல்லவே தின் மூன்றரைக்கே யுடன் சல்லவே வில் லை தட்டி யுலர்த்திடே.

2. உலர்த்திடு கலசத்துள் ளொடுக்கியே மலர்த்திடு சில்லு மூடி மண் சீலை செய்
திலக்திடும் பாண்டத்திட்டுள் மணல் சொரி மெலத்திடு மடுப் பேற்றி யெரித்திடே.

3. எரித்திடுஞ் சிகப்பேறு மணலிலே தரித்திடு லிங்கந் தானது பற்பமாம்
விரித்திடும் வியாதிக்கு பணவிடை திரித்திடு மறுபான மறிந்திடே.

4. தள்ளு பனைச் சாறணிலே பல் மெட்டு ஆலின் றன் விழுது களற் பலம் நாலதிலாட்டி
கொள்ளு செயந் தின மேழு குதகத்தின் வாயு குடி விட்டு மலட்டு வலி மலட்டுப் பூச்சி
தள்ளு மிது மாண்டு மலத்தோடே விழுஞ் சோதித்து யிம் முறை தப்பாது பாரு
விள்ளுவது பத்தியந் தானறியக் கேளு மீறுதே புளி புகையிலை யறிந்திடாயே..

கெந்தகர் ரசாயனம்:-

அறிந்திடாய் கெந்தியார் பலஞ் சுத்தி செய் யெரிந்திடா யெள்ளெண்ணை யீரைந்து பலந்
தெரிந்திடா தரைத்தே யிழைச் சீலையில் சரிந்திடா தப்பி காள் திரி தோய்த்திடே.

ஈது ஊக
தோய்த்திடு தீபச்சுடர்த் தயிலம் பிடி தாத்ரீச் சீரகந் தாளிச பத்திரி
போற்றிடு கையின் பூலவங்கப் பட்டை நேத்திரேலம் நெரிக்கிப் பரிந்திடே.

பரிந்திடும் வகைக்கு பலந் தன்னிறை சரி சரிந்திடும் லவங்கம் சாதிக்கா யொடு
வரிந்திடு வேர் வகைக்குப் பல மரை தெரிந்திடு வருக்கே பொடித் தோய்த்திடே.

ஓங்கிச் சூரண முந் தயிலத்தொடு வாங்கு சாம மரைத்து ரசயானம்
பாங்கு சுண்டைப் பழமிரு நேரமுந் தாங்கு மண்டலந் தானரை கொள்ளே:

கொள்ளுங் கை கால் கொதித் தோ வெடிக்கலு விள்ளுங் கூந்தல் மிருந்திர் புன் புரை
கொள்ளு மேகத் தியிர் குடை வாய்வு தள்ளும் நோயிலை தான் விடும் பாரிதே.

பார் பருத்திப் பருப்பொடு சீரகம் யேர் மதுர மோடேலமும் நெல் பொரி
சேரரிசியின் திப்பிலி கெந்தகமுங் கார் வகைக்கிடை கால் பலந் தோய்த்திடே.

தோய்த்திடு பொடி யாவிற் கழஞ்சிடை சாத்திடு ப்ழச் சாறு தேன் சர்க்கரை
போத்திடு யிரு போது மோ ரேழு நாள் யேத்திடு வாந்தி யிருமலும் பேருமே.

பேருங் கிறுணியும் பித்தமரோசிகம் வாருஞ் சுத்து மயக்கொடு விக்கலும்
பாரும் நாவிற் பசைத்தலுந் தாகமுந் தீருங் கற்க மிகைச் செய்து பார்த்திடே.
பார்த்து வேலிப் பருத்திக் கொழுந்ததில் மாத்ர நாலேந்தவை மிளகைந்திறல்
சேத்தக் கூட்டிக் திரட்டி யரைத்துடன் யேத்து நாளேழிரு போது முண்டிடே,

உண்டிடு கெற்பத்திருள்ளது வாயுவுங் கண்டு லோடிக் கழன்று திரம் விழும்
புண்டு உப்பு புளி புகை தள்ளி விட்டண்டு வெந்நீரோடன்னமு முட்டிடே.

மூட்டு நீர் வெடி முத்திப் பருப்பொடு நாட்டு நற்ககரை விரையுஞ் சமன்
சாட்டு நீ பழச் சாக்காலரைத்துடன் கூட்டு யிப்படி----கத்துமே.

நத்து மூவெழு நாளிரு நேரமும் பத்துப் போடியில் பாருய் மெய்தினில்-
கத்தும் வண்டு கடி படர் தாமரை மத்துஞ் சில் விஷம் வாங்கி யெறியுமே.

யெறியும், நற் துவரைப் போடதி யெரியும் வடித்தி யிடைக் கிடை
விட்டரைக் கரியும் பக்கிடில் கோரி யீரைந்தனுள் கெறியுந் காடைச் சயித்தியம்
மெட்டுமே.

அறுவகைச் சூரணம்:-

தீரவே சகல நோய் தீரக் கேளு சீரகத்தோடதி மதுர மதரப் புவே
தாரகமாங் கருஞ் சீரகஞ் சன்ன லவுங்க சதகுப்பை வகை வகைக்கு பலந்தானென்று

கூறவே சரக்காறும் ஆறு பலஞ் சொன்னோர் கொத்தமல்லி பல மாறு சமனாய்க் கூட்டி
சேருமே பல மென்ன பனிரெண்டாச்சு சீனி கல்கண்டு பலம் பனி ரெண்டாமே.

பனிரெண்டும் வெவ்வேறே யிடித்து ஒன்றாய் பாங்கான காசி மேலிலே அடைத்து
ஊனியே ஒரு கடி ஆளந்தி சந்தி ஒரு நேரம் வெந்நீரில் கொள்ளும் அய்யா
முன்னை சரீர திடம் நெஞ்சு வலியப்பா குலை யெரிவு நெஞ்சு வலி தீரும்
ஊனியே சிரசுநோ யெல்லாந் தீரும் ஒருமே பித்த மொடு பிரட்டல் நீருறல்
கண்ணில் நீர்ப் பாச்சலறும் பிரகாசமுறாகும் கலங்காமே புத்தி வரும் உள் மாந்தை தீரும்
தீருமே நித்தையுஞ் சுக முண்டாகும் தீராத சிறுக்கிருமல் சேரப் போகும்
மாறுமே யிடுப்பு வலி கல்லடைப்பு வலியாம் வாய் கோளல் வாய் நூறல் உள் மாந்தை
பித்தம்

தீருமே செவி இரையும் செவிருமை சேத்தும பிணி வீச்சுமியுந் தீரும்
சோருமே தொண்டைப் புண் கண்ட மாலை சீக்கிரத்தில் நீர்க் கட்டு சிறந்சி போமே.

<u>கூழ்ப்பாண்ட லேகியம்:-</u>

சீரகம் பலம்.ச, கொத்தமல்லி, கோஉந்ட மிளகு, மஞ்சள், சீனி சர்க்கரை
யெலம், சாதிக்காய், சாபத்திரி, அதிமதுரம், தாளிச பத்திரி, கிராம்பு,
கசகசா, சுக்கு ஆக வகைக்கு பலம்.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, சர்க்கரை
பலம்.13, தேன் சேர்.க, தாழஞ் சாறு படி.க, பூசனிக்காய்.க, தென்னம்
பாளைச் சாறு படி.க, மேல் முடிவு இல்லை.

<u>கொம்பரக்குத் தயிலம்:-</u>

கொம்பரக்கு பலம்.8, நல்லெண்ணை படி.2½, தயிர் தண்ணீர் சேர்.உ,
பால் சேர்.5, காடி சேர் 2, சதகுப்பை, கடுகுரோகணி, கிளியூறல் பட்டை,
பூஞ்சாந்து, பச்சலிகிச் சடிக் கிழங்கு, செவ்வள்ளி, லவங்கப் பத்திரி, லவங்கக்
தோல், சடாமாஞ்சி, கோஉட்டம், கஸ்தூரி மஞ்சள், அதிமதுரம், கெந்தகம்,
கருஞ்சீரகம், சீரகம், பிருஙங் கிழங்கு, ஏலம் ஆக வகைக்கு பலம்.¼, தீருகிற
வியாதி பித்த வெட்டை, அஸ்தி சுரம், தலை மய்க்கம் வாயூறல், சீத சுரம்
வத்தின தேகம், கொ வெட்டை கொ பாண்டு கொ சுரம், வெருத்த தேகம்,
வலி கடுப்பு, கத்தாழை, நாத்தம் கழுகளை மேகம், அரக்குத் தானி நீர் விட்டு
எட்டொன்யய்க் காய்ச்சவும்.

<u>காந்த செந்தூரம்:-</u>

காந்தம் பலம்.க, லோகம் பலம்.க, லிங்கம் பலம்.க, ரசம்
பலம்.3/4, கெந்தகம் பலம்.க, இதுகளை சுத்தி செய்து கய்யாந்தகரைச் சாறு
விட்டு அரைத்துப் பிறகு குமரிச் சாறு விட்டு அரைத்து பிறகு பழச் சாத்திலரைத்து
வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை செய்து புடம்
போட்டா செந்தூரமாம்: எடுத்துக் கொண்டு யிஞ்சிச் சாத்தில் தேனில், நெய்யில்
கொடுக்கவும். மூலக் கிருமி பாண்டு சோகை காசம் இதுகளுக்கு 5 நாள் 11 வேளை
கொடுக்கவும். நீர் முள்ளிக் கீரை கஷாயம் வைத்து தாகம் எடுத்தால் கொடுக்கவும்.
வெந்நீர் மோர் தயிர், நெய் ஆகாது.

<u>சாம்பிராணித் தயிலம்:</u>

கற்பூரம் சேர்.க, பால் சாம்பிராணி சேர்.ச, கருங் குங்கிலியம்
சேர்.½ பூலாங் கிழங்கு சேர்1/8ஆக சரக்கு ஐந்தும் யிடித்து பாண்டத்திலிட்டுத்
தயில மாக்கவும்.

<u>லிங்க குழம்பு வேதிக்கு:-</u>

தோணவே லிங்க மென்ற குழம்பு கேளு சுருக்கமடா வாளமது நஞ்சு போக்கு
காணவே விராகனிடை யெட்டுச் சேரு கருவான லிங்கம் ரெண்டு தாரம் ஒன்று
பூணவே பூரம் ஒன்று யேரண்ட மஞ்சு புகளாக யிம்முறையாய் சுத்தி செய்து
காணவே கல்லத்தில் விட்டுக் கேளு கருத்தாகச் சாம மொன்று ஆட்டுவாயே.

<u>லிங்கக் குழம்பு:-</u>

சாதிலிங்கம், வெங்காரம் ரெண்டு கூறு தக்காமணக்கு முத்து நாலு கூறு,
ஒசிய தோர் நேர்வாளம் யெட்டுக் கூறு உடன் கலந்துப் கரைத்து வுண்டை குன்றி
போலாம் போதலே வயறு விடத் தண்ணீராகும். போய வயறு சட்டி விட வெண்ணி
ராகும். நீகமுடன் பித்தம் நாற்பது மே போகும் புகழான வாத மெண்பத்தாறுந்
தீரும்.

<u>கெந்தகத் தயிலம்:-</u>

கெந்தகம் பலம்.4, பிரமிய வழுக்கைச் சாறு விட்டு 4 சாமமரைத்து அவல்
பதத்தில் யெடுத்து முட்டைக்குள் கருவை யூக்கிப் போட்டு அகனில் அடைத்து மேலே
மூடி உருந்து கொழும்பை வெள்ளைக் கருவு விட்டு அரைத்து 7 நாளைக்கு 7 சீலை
செய்து காய வைத்து----

செய்து காய வைத்து----

<u>கபாட மாத்திரை</u>:-

1. போடவே கபாட மென்ற மாத்திரை தான் கேளு புகழான சாதிக்காய் சாதிபத்திரி
மாசக்காய்
நாடவே சீரகமும் விடையங் கிராம்பு நலமான லபிஜி கறட வள்ளி கெற்பந்
தேடவே வெந்தியமும் கழச்சி வித்து திறமான குரோசானி பகிறென்றந் தான்
ஆடவே சமன் தூக்கி கல்வத்திட்டு அப்பனே ஆன்ந்த மூலிகைச் சாறே.

2. சாத்தாலே நால் சாமமரைக்துக் கொண்டு சாககமா யெலந்தை விரைப் பிரமாணந்
தான்
காத்தாலே மோதை யென்ற தயிரில் மூன்று காசு காந்த மதனிலிடு மூன்று நாள் தான்
வாத்தாலே வாழையுட பூவின் சாத்தால் வகையான களிச்சாற்றிலிட்டா யாகுல்
வேத்தாலே ரெத்த மூலம் கிருணி விதமான சலக் கிருணி சங்கிற கிருணியாமே.

3. ஆமப்பா சலக் கிருணி வாயுக் கிருணி அப்பனே குசிகா கிருணி தீரும்
போமப்பா சோற் சோரும் போகுங் கிரணி பொறுக்காத நீர்த் தாகக் கிருணி தீரும்
நாமப்பா வயத்திலுள்ள கடுப்புத் தீரும் நல்மான பாண்டுவுட கிருணி தீரும்
தாமப்பா அதிசாரக் கிருணி தீரும் தப்பாத புளி தள்ளிப் பத்தியந்தான் போடே.

<u>சண்ட மாருதம்</u>:-

4. போட்டா சடலத்துள் நோய்கட் கெல்லாம் புபதி தான் மருந்தொன்று சொல்லக்
(மறு பாட்டு) கேளு
பூரந் திசையிடையாம் நல்ல போட்டிடு லிங்கந்திக் கிடையாம்
வீரம் விரேயிடையாம் மேலிய கெந்தி விராகனிடை
செந்தூரம் விராகனிட சேர்த்து அரைத்து பொடியாக்கி 4 சாம மரைப்பு
முன்னேக் கெந்தியை அரைக்கிறது. மறுபடி பூரத்தை அரைக்கிறது. மறுபடி லிங்கம் மறுபடி
வீரம் ரச செந்தூரம் அரைத்து சிமிளில் வைத்துக் கொண்டு சண்ட மாருதம் சகல வியாதி
க்கும் ஆகும். இதுக்கு சுத்தி பூரத்தை வெள்ளேக் காக்கறட்டைட சாத்தில் சுத்தி செய்யவும்.
வீரம் முலேப் பாலில் கிருக்கு கொடுக்கவும். ரச செந்தூரம் முலேப் பாலில் சுத்தி
செய்து லிங்பம் பழுபாகல் சாத்தில் சுத்தி செய்யவும். சுருக்கு கொடுக்கவும்.

<u>ரச பதங்கம்</u>:-

திரிகடுகு, வெந்தயம், சரி யிடை சுக்கி யமத்தஞ் சாறு விட்டரைத்து குகை பண்ணி
காய வைத்து ரசம், கெந்திலிங்கம் இது மூன்றும் சமனிடை சேர்த்து பொடி பண்ணி முன்
குகையில் போட்டு யினக்க மாள சட்டிக்குள் ஒரு விரக்கடை உப்பு கொடி மேற்படி
குகையை வைத்து முக்கால் சட்டி உப்பு மேலே கொட்டி மேல் சட்டி மூடி யெழு சீலே
செய்து காய வைத்து 6 சாமம் யெரிக்கிறது. கொஞ்ச மிருக்குமாகில் பின்பு.க,
சாமம் வைத்து யெரித்து யெடுத்து வைத்துக் கொண்டு சகல மேகம், நெஞ்சடைப்பு,
சன்னி குலே இதுகளுக்கெல்லாம் சர்க்கரையில் $\frac{1}{4}$ பணவிடை வைத்து உருட்டிக் கொடுக்கவும்

பத்தியும் புளி, உப்பு தள்ளுபடி. ஏழு நாள் பச்சை தண்ணீரில் முழுகிறது. 3 நாள் விளக்
கெண்ணே முழுகிறது.
பசுவின் நெய்.உ, முழுக்கு மறுபடி மூதண்டக் கசாயம் வைத்துக் கொடுக்கவும்.
வாயு பதார்த்தம், கரப்பான், பதார்த்தம் ஆகாது.

<u>மேக சஞ்சீவி யெண்ணெய்</u>:-

சித்தாமணக்கெண்ணே படி.க, குமரிச் சாறு படி.$\frac{1}{4}$, வெங்காயச் சாறு படி.$\frac{1}{4}$
ஆவாரைப் பட்டை தாக்கு.$\frac{1}{4}$ யெட்டொன்பைக் கசாயம் படி.1/8 வல்லாரைச் சாறு
படி.$\frac{1}{4}$, பொன்னுங்கண்ணிச் சாறு படி.$\frac{1}{4}$, மணத்தக்காளிச் சாறு படி.$\frac{1}{4}$, கையாந்
தகரைச் சாறு படி.$\frac{1}{4}$, பிரமிச் சாறு படி.$\frac{1}{4}$ இவை யெல்லாம் எண்ணெயில் விட்டு
மெழுகு, சங்கன் குப்பிச் சாறு படி.$\frac{1}{4}$ பதமாகக் காய்ச்சி மேக ரோகம், பித்த
வெட்டை, தந்தி மேகம், புண், புரை யிவைகளுக்கு.க பலங் கொடுக்கவும். ராத்திரிக்கு
க காசிடை கொடுக்கவும். இச்சா பத்திய மிருக்கவும். தாளாதவருக்கு புளி, கறி
கொடுக்கவும். வீழியிலேச் சாறு படி.க, சித்தாமணக்கெண்ணே படி.க, காய்ச்சி
இறக்கி.க, விராகனிடை ரச கற்பூரம் பொடித்துப் போட்டுப் புண் அரையாப்பு இவைக்கு
கொடுக்கவும். கடும் பத்தியம்.

<u>காந்த செந்தூரம்</u>:-

1. பாரப்பா யின்னமொரு செந்தூரந்தான் பாங்கான கெந்தி சமன் காந்தம் கூட
நேரே நீ கரிசாலே சாற்லாட்டி நினவாக வில்லே தட்டிக் காயப் போட்டு
சாரப்பா ஒட்டிலிட்டு ஒடு மூடித் தயவாகச் சீலே மண்ணேழுஞ் செய்து
தாரப்பா கெச புடத்தில் போட்டு வாங்கித் தயவாக அரிதிடைக்குக் கெந்தி கூட்டே

2. கூட்டியே முன் சாத்தாலரைத்து முன் போல் குணமாக்கி செசபுடத்தில் போட்டு
வாங்கி
நாட்டியே அந்திடைக்குக் கெந்தி கூட்டி நலமான பழச் சாத்காலரைத்து முன் போல
மாட்டியே கெச புடத்தில் போட்டுப் பின்பு மைந்தனே. அந்திடைக்கு கெந்தி
கூட்டி
காட்டிகமா யந்திடைக்கு சித்திர மூலந் கயவாகத் தான் கூட்டி முலைப் பாலாட்டே.

3. ஆட்டியே வில்லை தட்டி ஓட்டிலிட்டு அப்பனே முன் போலப் புடத்தில் போடு
நாட்டியே கெந்தியொடு சித்திர மூலம் நன்மையுடன் அந்திடைக்கு ஒன்பைக் கூட்டி
~~ஆட்டிடுவாய்-சோதியுடன் அந்திடைக்கு-ஒன்பைக்-கூட்டி-ஆட்~~
ஆட்டிடுவாய் கோழி முட்டை வெண் கருவிலே அப்பனே வில்லை செய்து புடத்தில்
போட்டு
காட்டிடலே பின்பெடுத்துக் கல்வத்திட்டு கனமான யெருக்கம் பால் தன்னாலாட்டே.

<u>வெட்டி வேர் தயிலம்</u>:-

பத்து பலம் வெட்டி வேர் யிடித்துப் போட்டு ஒன்றுக காய்ச்சி யிறத்துக் கொண்டு அதிமதுரம் பலம் அரைத்துப் போட்டு நாழி யெண்ணை விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுகவும். பீனிசங்கள், மண்டை குலை, வட்டம், பிறநீர்க் கோர்வை, கண் புகைச்சல், காது மந்தம், யெப்பு யிளைப்பு, காது யெரிச்சல், காந்தலுக்கு மண்டலம் ஒன்றை விட்டு ஒரு நாள் முழுகவும்.

<u>வேம்பிருட தயிலம்</u>:-

வேப்பம் பட்டை ¼ துலா யிடித்துப் போட்டு தூனி நீர் விட்டுவறிக் காயிறது. எட்டொன்றுய்க் காயச்சி யிரு நாழி யெண்ணை விட்டு அதிமதுரம் பலம்.ச, அரைத்துப் போட்டு மெழுகு பதமாகக் காய்சி முழுக வாதம், சூலை குஷ்டம், தழுவணை மேல்க் கடுப்பு, செங்கரப்பன், புண், புரைகள் தீரும்.

<u>கொடிவேலித் தயிலம்</u>:-

கொடிவேலி வேர் பலம்.10., நன்று யிடித்து பதக்கு நீர் விட்டு எட்டொன் றுய்க் காய்ச்சி நாழி எண்ணை விட்டு பசு வெண்ணை புன்னைக் காசயளவு போட்டு சரகம், ஒரு பலம் அரைத்துப் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுகவும். ஆனந்த வாய்வு, மூல வாய்வு, வாதம் சிறு சொறி, தினவு குட்டம் சூலை, அரையாப்பு கிரந்தி பிளவை வீக்கம் இந்த வியாதிகள் தீரும்.

<u>சீரக தயிலம்</u>:-

2 படி சீரகம் பதமா யிடித்து பதக்கு நீர் விட்டு யெட்டொன்றுய்க் காய்ச்சி கசாய மிருத்து நாழி எண்ணெயில் விட்டுக் கார்கோலரிசி இரண்டு பல மரைத்துக் கலக்கி மெழுகு பதமாகக் காய்ச்சி முழுகவும். குன்ம மெட்டு வாய்வு பத்து வட்டம் தழுதழை வாந்தி, பித்தம், கிறு கிறுப்பு, வாயுவிறல் வந்த சோகை, பாண்டு கண் குளிர்ச்சி உஷ்ணம், கபால சூடு, கப நீர்க் கட்டு இந்த வினை யெல்லாந் தீரும்.

<u>சூரித் தயிலம்</u>:-

கால் துலாக் சூரி யிடித்து அத்த நீர் பதக்கு விட்டு ஒரு விறகாய்க் காய்ச்சி யெட்டொன்றுக்கி யெண்ணை நாழி விட்டு ஆறு மாத்தைக் காடி நாழி விட்டு ஒரு பலம் சுக்கு அரைத்துப் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி மண்டல முழுகக் கிரந்தி, குஷ்டம், சூலை குன்மம், கிராணி, வாங்காத பீனிசமு மண்டைச் சூலை தீரும்.

<u>சங்கம் வேர் தயிலம்</u>:-

சங்கம் வேர் கால் துலா யிடித்துப் போட்டுத் தூணி நீர் விட்டு யெட் டொன்றுக்கி உ படி எண்ணை விட்டு க பலம், மிளகு அரைத்துப் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுகவும். குட்டம், சொற்றி, சிரங்கு, கிரந்தி, சூலை, செங் கரப்பன், வண்டு கடி, சில விஷங்கள், குரங்கு போல் வலிக்கின்ற கூடியங்கள் மத்திருமல், வாத கூடியங்களித்தனையுந் தீரும்.

(வேறு)

அமுக்கிரா பலம்.10 யிடித்து பதக்கு நீர் விட்டு காய்ச்சி க படி எண்ணை விட்டு எலுமிச்சம் பழச் சாறு நாழி விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுகப் பீனிசங் கள் தீரும்.

<u>செம்முள்ளித் தயிலம்</u>:-

செம்முள்ளி பலம் நூறு யிடித்து தூணி நீர் விட்டு யெட்டொன்றுய்க் காய்ச்சி நாழி யெண்ணை விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுக கூடிய மீளை, சல ரோகங் கள், மந்தார காசம், வாதம், கச நோவு கரை நோவு, கண்ணீர்ப் பாச்சல் புண், புரைகள் அரையாப்பு கிரந்தி அண்ட வாதம் வீக்கம் விஷ பாகம், பித்த வினையுந் தீரும்.

<u>செம்முள்ளி தயிலம்:-</u>

செம்முள்ளி பலம் நாறு யிடித்து ஆனி நீர் விட்டு யெட்டொன்றாய் காய்ச்சி நாழி என்னை விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுக கூடியமிளை, சலரோகம், மந்தார காசம் வாதம், கசநோவுகரை, நோவு கண்ணீர் பாச்சல், புண், புரைகள்; அரையாப்பு, கிரந்தி, அண்ட வாதம், வீக்கம், விஷபாகம், யிக்கலையுந் தீரும்.

<u>இஞ்சித் தயிலம்:-</u>

பச்சை யிஞ்சி கால் துலா பரிந்திடித்து பிழிந்து யிரத்தக் கொண்டு நாழி என்னை விட்டு பசுவின் பால் படி விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி முழுக மண்டை சூலை, வாதம், நிலை கெட்ட பீனிசங்கள், யெய்ப்பு, யிளைப்பு, வாத வாய்வு, யீளை யிருமல், நெஞ்செறிவு, கால் கடுப்பு, குட்டம் அனைத்துந் தீரும்.

<u>அருகம் வேர்த் தயிலம்:-</u>

அருகம் வேர் நாறு பலம் மேலுள்ள பச்சை யெல்லாந் தள்ளிப் போட்டு இடித்துக் கொண்டு நாலு படி தண்ணீர் விட்டு குழம்பாகக் காய்ச்சி யெட்டொன்றாய்க் காய்ச்சி நாழி என்னை விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி மூழ்க மூலச் சூடு, கபாலச் சூடு; பித்த மெல்லாந் தலை செப்டோடும்; வாதம், அழுகிரந்தி, சூலை; வயறெரிவு, நெஞ்சு நோவு, மேல் வறட்சி; நீர்க் கடுப்பு, அக்கினி குளிரு மது போமே.

பாரப்பா யேழு வகைப் பீனிசமுந் தீரப்ப பாடுகிறேன் வெகு சுரு கோரெனலை கேளு காரப்பா நல்லெண்ணை படி தான் ரெண்டு கரிசாலை அவுரிச் சாற் பொன்னாங் கண்ணி வாரப்பா வெத்திலைச் சார் முசுமுசுக்கை உழலாத்தி மூக்கறட்டை அத்திப் பட்டை ஊரப்பா வகைக்கு ஒரு படி தான் சாறு ஆதண்டைச் சாறு படி ரெண்டு வாரே.

வாரே நீ பழச் சாறும் ஆவின் பாலும் வாரே நீ படி யொன்று நொச்சிச் சாறு காரே நீ கருஞ்சீரகம் கடுகுரோகணியும் கஸ்தூரி மஞ்சளொடு கடுக்காய் பறணி காரே நீ அதிவிடையம் அரத்தை சுக்கு கோஷ்டமுடன் சதகுப்பை குரோசாணி ஓமம் தேரே நீ நத்தப் பூத் தாளிச பத்திரி திப்பிலியின் மூலமொடு சித்திர மூலம் நொச்சி கீழ்காய் நெல்லி பாலமாம் வகைக்கு ஒரு களஞ்சி வீதம் பழச் சாத்தாளாட்டி யெண்ணை தன்னில் வாரு அதின் மேலே யடுப் பேத்தி யெரி----

<u>தாளக பற்பம்:-</u>

பேரண்டத்தைக் கொண்டு வந்து தேசி நீர் விட்டுக் காடி விட்டு பூனீறு.க பலம் போட்டுக் காய்ச்சி $\frac{1}{4}$ படி கலத்திலே யிறக்கி அலம்பி இந்தப் படி 4 தரங் காய்ச்சி அலம்பி நாமக் கட்டி கரைச்சு அலம்பின ஓட்டை போட்டு கொஞ்சங் கொதிக்க வைத்து யெடுத்து வில்லை வில்லையாய்க் காய வைத்து எடுத்து தேச்சு தட்டி கல்வத்திலே போட்டு வெள்ளெருக்கம் பால் விட்டு அரைத்து வைத்துக் கொண்டு தாளகக் கட்டியில் கல் சுண்ணாம்பும் பனங் கள்ளில் சுத்தி யேழு தரம் சுத்தி பண்ணி 5 தரம் வெள்ளாவியில் வைத்து யெடுத்து காய வைத்து அதின் மேல் மேற்படி பால் ஒரு சீலையிளாட்டி ஒரு சீலை செய்து அதுக்கு மேல் யேழு சீலை மண் செய்து காய வைத்து முக்கால் முழப் புடம் போட நீறும்

<u>இருமலுக்கு:-</u>

நெல்லிக்காய் சாறு படி.$\frac{1}{2}$, இஞ்சி சாறு படி.$\frac{1}{2}$ சுக்கு விராகனிடை.3, திப்பிலி விராகனிடை.3, மிளகு விராகனிடை.3, ஏலம் விராகனிடை.3, சிறு தேக்கு விராகனிடை.3, கற்கடக சிங்கி விராகனிடை.3, வாலுளுவை விராகனிடை.3 இந்துப்பு விராகனிடை.3, சிறுநாகப்பூ விராகனிடை.3, கண்டங் கத்திரி பழம்.3 சித்தரத்தை பலம்.3 முயல் ரெத்தம் படி.$\frac{1}{2}$ பசுவின் நெய் படி.$\frac{1}{2}$ இந்த சரக்கெல்லாம் நெல்லிச் சாத்தை விட்டு அரைத்து நெய்யில் போட்டு காய்ச்சி சக்கையை எடுத்துப் போட்டு நெய்யைச் சாப்பிடவும். பத்தியமில்லை. ஆடாதோடை, கண்டங் கத்திரி, துளசி இம் மூன்றும் பிட்டு வைத்து அவித்து சாறு பிழிந்து கொண்டு $\frac{1}{4}$ பலம் திப்பிலி வறுத்து மாவு பண்ணி 2 பங்கு செய்து ஒரு பங்கு சாப்பிடவும்.

<u>அஷ்ட குன்மத்துக்கு அவிஷதம்:-</u>

சோம்பு குட்டம் மேற்படி குட்டத்தை கோமியத்தில் சுத்தி செய்து இது இரண்டுக்கும் சரியிடை நாயுருவிச் சாம்பல் சேர்த்து சோம்புக்கு காணிடை காயம் சேர்த்து தேனில் மத்திச்சுக் கொடுக்கவும்.

<u>பச்ச லவண பற்பம்:-</u>

கல்லுப்பு; வளையலுப்பு இந்துப்பு, உவருப்பு வெடி, வெடியுப்பு இதுகள் சரியிடை கல்வத்தில் போட்டு முருங்கைப் பட்டை சாத்தில் சாமம், குப்பை மேனிச் நொச்சில் சாறு கத்தாளைச் சாறு, பிறண்டைச் சாறு, ஆகச் சாறு ஐந்தும் சாமம்.5 ஆக அரைத்துச் சிறு வில்லைகளாய் தட்டிக் காய வைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை

செய்து 12 விராட்டியில் புடம் போட்டு யெடுக்க பற்பமாம். இதுக்கு அநுபான மறிந்து கொடுக்கவும். பனை வெல்லத்தில் கொடுக்கவும். வாய்வு, பகாரித்தம் தள்ளுபடி இதுக்கு தீரும் வியாதி வாய்வு, பொருமலிவுகள் தீரும். யிரைச்சல் தீரும்.

ஓம லேகியம்:-

ஓமம் கால் படி வாங்கி தண்ணீர் விட்டு அரைத்துக் கழுவிப் போட்டு மறுபடி பசுவின் பால் விட்டு அரைத்து மெழுகு போலே யெடுத்துக் கொண்டு மறுபடி ¼ படிபால் விட்டு மெழுகு பகமாய் காய்ச்சி யெடுத்துக் கொண்டு சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி பொருமல், உப்பிசம் ஆமம போம் வாய்வு வலி அக்கினி மந்த மருக்கும் ஓமந் தனக்கிரைச்சல் ஓடுமே. நேரே வயத்து வலி சூலை வளக் குப்பு தீரும்.

பவள பற்பம்:-

பவளம் வாங்கி ஒட்டில் வைத்து கொம்புத் தேன் அரை மட்டத்துக்கு விட்டு வெய்யிலில் வைத்து போங்க விட்டு மேலோடு மூடி மூன்று சீலை செய்து காட்டு விரட்டி முப்பது விருட்டியில் புடம் போட்டு யெடுத்து பசுவின் பால் விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஒட்டில் வைத்து ஒரு மூடி சீலை செய்து பதமாகப் புடம் போட்டு எடுக்கச் சுண்ணமாகும். சிமிளில் வைத்துக் கொண்டு தேன் பனைவெல்லம் இவைகளில் அநுபானமாய்க் கொடுக்கவும். ஈளை இருமல், புகைச்சல் தீரும். 7 நாள் கடும் பத்தியம். மூன்று நாள் உப்பு வறுத்துக் கூட்டவும். 7-ம் நாள் ஓமம் தலைக்குத் தேய்த்து தண்ணீரிலிடவும்.

செங்கொட்டை வல்லாதி:-

1. நோய் தீரச் செங்கொட்டை வல்லாதி சொல்வோம் நுணுக்கமாய் செங்கொட்டை
பலந்தான் பத்து
மோயவே சாளிப் பால் சுத்தி செய்து மூக்கு வெட்டி யின்ன மகில் முறையைக் கேளு
சாயவே கொடிவேலி பறங்கிப் பட்டை சங்கோடு அமுக்கிறா சிவனார் வேம்பு
ஓயவே மாவிலிங்கம் பட்டையோடு உத்தமனே வகை வகைக்கு ஒரு பலந் தானென்னே.

2. என்னவே கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் யிரு திப்பிலி கடுக்காய் வாலுளுவை கோஷ்
டம்
சொன்னதொரு யிவை யெல்லா யிடித்து வேறே சூரணமாய் வைத்திட்டுச் சொல்லக்
கேளு
உன்னியே முன் சொன்ன செங்கொட்டை தன்னை ஊற விட்டு சொப்பரையின் தேங்காய்
ரெண்டு
யென்ன யெள்ளுமொரு படி தான் ஒன்று யிடித்து அதின் பிறகு சூரணத்தைக் கொட்டே

3. கொட்டியே சேர்த்தொன்றாய் யிடிக்கும் போது குமுறவே பனை வெல்லமஞ்சு பலம் போடு
திட்டமாய் ரச கற்பூரம் விராகனஞ்சு சேர்த்திடித்து வல்லாதி செய்து கொண்டு
நாட்டலே வல்லாதி அந்தி சந்தி நாளொன்று வெருகடி தான் நயந்து கொள்ளு
கட்டமாய்க் கிரந்தி யரையாப்புச் சூலை குன்ம மொடு வயத்து வலி வாய்வுச் சூலை.

4. சூலையொடு சூசிகா வாய்வுந் தீரும் சொற் பெரிய மேக மெல்லாந் தொல்லா
தோடும்
வாலையாந் தேகமது சித்தியாகு மண்ட ந்தான் பத்தியமாய் கொண்டு வா நீ
காலமே பத்தியத்தைச் சொல்லக் கேளு கைப்போடு புளிப் புகையும் பெண்ணுந் தள்ளு
பாலோடு மத்த தெல்லா மிச்சா பத்தியம் பாங்கான உப்புதனை வறுத்துக்
கொள்ளே.

5: வில்வாதிக் குழம்பு:-

பாருகிறேன் வில்வாதிக் குழம்பு சொல்வேன் பாகரிய நோயெல்லாம் பறந்து போக
ஆடியதோர் வில்வ வேர் பலமுப்பத்தைந்து அதிருடைய புறந் தானும் ரெண்டு பத்து
பலமாம்
பாடியே யிடித்து மொரு பாண்டத்திட்டு பதக்கு நீர் அளந்து விட்டு அடுப்பிலேத்தி
வாடியே யெரித்ததனை மூன்று படியாக்கி வத்திய பின்னிருக்கதிலே சரக்குப் போடே.

6. போடுவது நல்ல வெல்லச் சர்க்கரை தான் மைந்தா போட்டதனைப் பாகு வரும்
பதத்தில் கேளு
தேடுவது திப்பிலியும் திப்பிலி மூலம் செவியமொடு மிளகிஞ்சி சித்திர மூலம்
தேடுவது திப்பிலியும் திப்பிலி மூலம் செவியமொடு மிளகிஞ்சி சித்திர மூலம்
தேடுவது சீரகமும் பலம் லவங்கம் சிறு நாகப்பூவோடு தாளிச பத்திரியும்
ஆடுவது அதிமதுரம் கசகசாவும் அளகால வாலுளுவை மாஞ்சி காணே.

7. காணென்ற அதிவிடைய மதுர மிந்துப்பு கண்டு கொண்டு வகைக் கிரண்டு பலந்தான்
சொன்னோம்
தானென்ற குங்குமப்பூ கிராம்பு பத்திரி சாதிக்காய் வகை வகைக்கு விராகன் ரெண்டு
போனென்ற யிவை யெல்லா மிள வறுப்புச் செய்து பொடியாக்கி சகாயத்தில்

யேதென்ற கஸ்தூரி விராகன் போடு யிறக்கி வைத்து நாளொன்றுக் கிரு நேரங் கொள்ளே.

கொள்ளுவது நேர மொன்று புன்னைக் காயளவு குன்ம மொடு சத்தி விக்கல் நெஞ்சு வலி தீரும். கொள்ளவே அரோசிகமும் மூக்குநீர்ப் பாச்சல் குலை யெரிவு------
(முன் ஏடுகள் யில்லை. மருந்து முன் தொடர்ச்சி யில்லை) அளந்து விடு ஆவின் நெய் படி நாலுலே.

1. நாலோடு சாதிக்காய் கிராம்பு பத்திரி நற்சீரக மேலம் லவங்கப் பட்டை
சாலோடு மர் சிட் சாத்திர பேதி சதகுப்பை வாய் விளங்கம் தாளிச பத்திரியும்
சேலோடு தேவதாரம் நல்ல சந்தனமும் சிறு நாகப்பூவோடு மதுரங் கோஷ்டம்
காலோடு முள் குமுவை சிங்கி தேக்கு கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சளமே.

2. மஞ்சளாந் திப்பிலியுந் திப்பிலி மூலம் மாஞ்சி யொடு கடுகு ரோகணி நெருஞ்சிக் காயும்
கொஞ்சியே கொத்தமல்லி கோரைக் கிழங்கும் குரோசாணி வால் மிளகு கடுக்காய் நெல்லி
மிஞ்சவே குங்குமப்பூ மாதளையின் பிஞ்சு விளங்கவே வகைக்கு நாற் களஞ்சி கூட்டே
அஞ்சாதே ஆவின் நெய் படி நாலு அரைத்துமே கரைத்து முன்னை நெய்யில் வாரே.

3. வாரே நீ செவ்விள நீர் படி தான் ரெண்டு வல்லாரைச் சாறு படி ரெண்டு வாறு
சேரே நீ பழச் சாறு படி தான் ரெண்டு சீனி யெனுஞ் சர்க்கரை தான் பலந்தான் ரெண்டு
காரே நீ நல்ல வெல்லம் பலந் நாலு கரைத்துமே யடுப்பேற்றி யெரித்துக் காச்சே
வாரே நீ மெழுகு பதந் தன்னைப் பார்த்து வடித்திடவே வடி கலசந் தன்னில் கேளே.

4. தன்னிலே சீரகமுங் கோரோசினையுங் கூட்டு சார்வாக வைத்து பின்பு சாத்தக் கேளு
நின்னயமாய்க் கணபதியின் கந்தன் பூசை நிரையாகச் செய்துமே நெற்புடத்தில்
முன்னுதாய் முப்பது நாள் வைத்தெடுத்து முறையோடு முக்களஞ்சி நெய் தான் கொள்ளு
சொன்னதொரு நாளொன்றுக் கிரு நேரங் கொள் அலையாத வியாதி யெல்லாம் அலைந்து போமே.

5. அலைந்தோடும் சயமீளை பித்த காசம் சொல்லரிய கலை நடுக்கல் சொல் மாருட்டம்
உலைந்து போ முஷ்டண மொடு பிரமியங்கள் மேகம் மூத்திரக் கிரிச்சியொடு கல்லடைப்பு
அலைந்தோடுப் பெரும்பாடு ரெத்தசோரயம்பு வனலோடு மேலெரிவு உஷ்ண காந்தி
அலந்து போம் முசல் வலிப்பு மிருமலீளை வாய்வோடு நீர்ச் சிறுப்பு வெட்டை போமே

6. போமென்ற பவள பறபங் கூட்டிக் கொள்ளு பொல்லாத நோயெல்லாம் பொடியாய் போகும்
தேமென்ற கெற்பத்தி லெழுந்த நோயும் தீர்ந்து விடு மலடிக்குப் பிள்ளையுண்டாம்
காமென்ற பத்தியந் தான் சாந்தமாய்க் கொள்கைப் போடு புளி ரெண்டுந் தள்ளிப் போடு
காமென்ற கன வேகம் மெல்லலந் தீரும் கை கண்ட வித்தை யிது கண்டு பாரே.

7. <u>கெற்ப நோய்க்கு</u>:-
பறந்து போம் கெற்ப நோய் தீர வேண்டிப் பாடுகிறேன் விளக்கெண்ணை படி தான் ரெண்டு
விரைந்திட்ட பேய்க் குமட்டிச் சாறு படி ரெண்டு வேம்பிறட பட்டைச் சார் படி தான் ரெண்டு
நிரைந்தக் கழக் கொடி பிரமி அய் விரலி தொத்தான் நேரான உள்ளித்தி காட்டுள்ளி சாறு
யிருந்திட்ட வகைக்கிரண்டு படி தான் சாறு என்னையிலே வாத்திடு நீ யின்னங் கேளே.

8. கேளே நீ கொடிவேலி பஞ்சம் பாளை கிருவைநிலையாவாரை குருந்து சங்கு
வேளே நீ மூங்கிலிலை கஸ்தூரிப் பட்டை வெள்ளருகு கலை தருனி காக்கறட்டான் குமரி
வாளே நீ வெள்ளைச் சாறணையிதெடு வகை வகைக்கு ஒரு பலந்தான் வரிசையாக
கோளே நீ கொடிக் கள்ளிச் சாத்தாலாட்டிக் குழப்பியே யென்னையிலே கரைத்து வாரே.

9. வாரே நீ கடுகோடு திப்பிலி கடுக்காய் வால் மிளகு குரோசாணி கடுகுரோகணி
ஆரே நீ கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் அரத்தை சுக்கு மிளகு சிறு நாகப்பூ
பேரே நீ யிந்துப்பு ஆனைத் திப்பிலி பெருங்காயஞ் சாதிக்காய் தாளிச பத்திரியும்
ஏரே நீ செங்கொட்டை ரச கற்பூர மிஞ்சியொடு யிவைச் சார மியம்பக் கேளே.

10. இயம்புகிறேன் வகை வகைக்கு நாற் களஞ்சி யெலியா வின் சாறெடு வெள்ளாட்டு நீர்
அயம்பாதே விட்டரைத்து யென்னையிலே வாரு அடுப்பேற்றி யெரித்து நீ மெழுகு பதம் பாரு
அயம்பாத வடி கலசந் தன்னில் கேளு வாகாக சக்கராளோடு வெங்காரம் ரெண்டும்
மயமாக வகை ரெண்டு களஞ்சி போடு வடித் தெடுத்து யென்னையை நீ வைத்துக் கொண்டு
நயம்பா ஆ ரதிஉஷ்டி மூன்று நாளும் நாளொன்றுக் கோர் கரண்டி யென்னை சொள்ளே.

11. என்னைதான் மூன்று நாள் கொள்ளும் போது யென்ன சொல்வேன் கெற்ப நோயேழு மெங்கே
துன்னவே சூதக வாய்வு கிரஉஞ்சி சிக்கல் துன்பந் தலைந்தோடும் கெற்ப வாய்வு கெற்ப சூலை
விண்ணவே பத்தியந் தான் மூன்று நாளும் வெள்ளாட்டுப் பாலொழியவேயென்றுகா
அன்னவே பாலில்லா வென்னீராகும் அப்பனே நாலா நாள் தலை நீர் வாரே.

12. வார்த்த நாள் முதல் மறு மூன்று நாளும் மைந்தனே ஆரையிலை கிருவையிலை ரெண்டும்
ஆத்துமே அய் விரலி யிலையுங் கூட்டி அரைத்தாவின் பால் வெண்ணை தன்னில் கொள்ளு
ஏத்தமே ஆறு நாள் யெண்ணை மூழ்கு ஏழா நாள் நாயகரேழுங்கச் சொன்னோம்
போக்கரிய மலடியுமே பெறுவாள் பிள்ளை பெண் மலடோ உலகத்திலில்லை தானே.

13. இல்லையப்பா கை கண்ட விக்கை பாரு யரிசியே யாறும் பிள்ளையுண்டு
தொல்லையே பிசாசு பிணி கிரகம் போக உச்சமாய் சாந்தி செய்து தகடு செய்து
அல்லவே நோயோடு பேயுங் கூடில் அவிழ்ந்தந் காணேது செய்யுமப்பா கேளு
மல்லவே மணி மந்திர முன்னே செய்து மறுபடி நீ மருந்து செய்யப் பலிக்கும் பாரே.

14. வாழ்கவே வெண்ணையிலே நவச்சாரம் போட்டு மைந்தனே நீர் முள்ளிச் சாறு விட்டு
வாழ்க்வே உள்ளுக்கு கொள்ளச் சொல்லு மகோதரம் நீராம்பல் பெரு வயறு சூலை போகும்
பொல்லாத குன்ம மெட்டும் பித்தமொடு உள் மாந்தை பாண்டு சோகை
யேகுமே கபத்தோடு வாத சூலை யிந்திர கண்டி மலக் கட்டு யிரைச்சல் வாய்வே.

15. வாய்வோடு புழுக் கிருமி யெல்லாம் போகும் வாகு பெறச் சொல்லி விட்டேனென்னை தன்னை
வாய்வோடு வியாதிகட்கும் மலடி சட்கும் மைந்தனே யென்னுதலைச் சொன்னோம் பாரு
நேர்யே அவரவர்கள் செய்த கன்மம் நோய் போல அவரவரைத் தொடர்ந்ததப்பா
நாய் போலே அலையாதே சொல்லக் கேளு நலமான கற்மத்தைத் தீரச் செய்யே.

16. <u>அமுர்தாதி உருண்டை</u>:-
போமென்ற அமுர்தாதி உருண்டை கேளும் புகழான கோரோசனை செண்பகப்பூ கோஉஷ்டம்
வேமென்ற வெட்டி வேர் யேலமோடு மதுரம் பிரமான சாஸ்திர வேதி மாசி பச்சை
காமென்ற தானிக்காய் வகை களஞ்சு ரெண்டு கனமான முலைப் பாலால் கருதியாட்டு
ஆமென்ற தில்லாட்டா லெட்டி வேர்க் கசாய மாட்டியே கடலை யளவுண்டை செய்யே.

17. செய்து நிழலுலத்தி வைத்துக் கொஞ் திரமான வெந்நீரில் முலைப்பால் விட்டு
வேறரைத்துமே உடல் பிரட்டல் உஊன சூடு காந்தி தாப சுரம் பித்த சுரம் சாந்த மாகும்
பொய்துமே கனமந்த மாந்த சன்னி புரக் கழிச்சல் போர மாந்தங் கணை வெட்டைச் சூலை
என்றுமே சிறு பிள்ளை நோயெல்லாந் தீர யிதமான அமுர்தாதி உருண்டை சொன்னேன்
பொய்தலே காமாலை பாண்டு சோகை போகவே சிந்தாதி புகலக் கேளே.

<u>சிந்தாதி</u>:-

18. புகலுகிறேன் புளியிலை தான் பலந் தாறாய் புகழ்ந்து ஒரு படி தயிறு மதிலே பாசி
நிகழுறேன் முவலை வேர் சாறனை நெருஞ்சி நேரான தழுதாழை கண்டங்கத்திரி
விகுசிறேன் கருமுள்ளி கீழ்காய் நெல்லி மேலான செம்முள்ளி வகைக்கு பலம் பத்து
யிகலுகிறேன் முன் மருந்தோடொக்கச் சேர்த்து யிவை யெல்லா மிடித்து மொரு பாண்டத்திட்டே.

19. இட்டுமே யிரு நாழி சலந்தான் விட்டு யெரித்ததனை எட்டொன்றாய் வத்தக் காச்சி
சுட்டுமே கசாயத்தை யிறுத்து வாங்கி கரிசாலை சாத்திலே படி தானென்று
கோட்டுமே பழச் சாறு படி தானென்று கொர்முட்டி மாதளைச் சார் படி தானென்று
நாட்டுமே யீருள்ளிச் சாறு படி யொன்று நல்லெண்ணை படி யொன்று அதிலே வாரே.

20. வாத்துமே கொதிக்கையிலே மருந்து கேளு வளமான இஞ்சியொடு தேவதார்ரம்
சேத்துமே செவியமொடு திப்பிலி மூலம் திறமான வகை யொன்று பலம் பத்தாக
காத்துமே. குரோசாணி மிளகு திப்பிலி காரிய சீரகமு மோம மிலவங்கப் பட்டை
வாத்துமே கடுக்காயும் ஆவாரை முட்டு வகை தனக்குப் பலமொன்று பழங் கிட்டம் நாலே.

21. கிட்டமது சேர்த்திடித்து ஆளதாக கேள் மகனே கசாயத்தில் போட்டு கிண்டு
உட்டமது பனை வெல்லம் பலந் தானது லோக செந்தூரமது ரெண்டு பலம் போடு
விட்ட மென்ற ஆவின் நீர் தன்னில் கொஞ்சம் விட்டுமே லேகியமாய்க் கிண்டிக் கொள்ளு
அட்டுமே நாளொன்றுக் கந்தி சந்தி அப்பனே நேரமொரு பாக்களவு கொள்ளே.

22. கொள்ளவே பாண்டு காமாலை சோகை குத்தலொடு பீனிசமாஞ் சுவாச காசம்
கொள்ளவே யின்னவகை வியாதி யெல்லாம் குலைந் தோடச் சித்தாதி லேகியந்தைச் சொன்னேன்
கள்ளவே லேகியந்தான் கொள்ளும் போது கைப்போடு புளி புகையும் ரெண்டுந் தள்ளு
விள்ளவே வெள்ளாட்டு வத்தல் வறுத்து கூட்டு விளம்புகிறேன் சுராங்கிச மாத்திரை சுச தான் சொல்லே.

23. <u>அகஸ்தியர் சஞ்சீவி குழம்பு</u>:-

திருவருள் பொதிகை தேவரகஸ்தியர் அருளுரைப் பொருளா யாவரும் புகழக்
குருவருளான குழம்பு சூரணத்தை திருவ ருளென்று செபித்தவர்க்கு யிரு வினை
தீருமென்றே குரு முனி மகிழ்ந்து கூறினான்றே கற்பித்த கடுக்காய் கடுகு இந்துப்பு
நலப் பெருங்காயம் நல்ல வெங்காரம் மொப்பிய சூதம் மேவிய மனோசிலை
திப்பிலி சீரகம் சிறந்த அரிதாரம் கோப்படன் கடுகு ரோகணி நாவி அப்படி
மருந்து அது பனிரெண்டு இப்படி நேர்வாளம் யிதுக்குச் சமன் கொண்டு உற்பன
நஞ்சு உள்ளே போக்கி நல்லுளிப் பருப்பா அஞ்சாமல் அது பொடி செய்து
கொஞ்சிய குளம்பு கூட்டிடவேண்டி வஞ்சி பழஞ் சாத்தில் ஆறு நாள் வேலிப் பருத்தி
சாத்திலொரு நாள் கொஞ்சிய தேங்காய்க் குடுக்கையின் கரிதான்
அஞ்சு விராகனிடை அது நிறை சேர்த்து பாகான கருப்புட்டி படுபாதி சேர்த்து
வாகான தேங்காய்ப் பால் விட்டரைத்து சேகரத்துடனே சிமிளினில் சேர்த்து
வாகான நோய்க்கு வகை குன்றி யிந்து வெள்ள அக்கிரம வித் மேவு தோஉடம்
செளிம்புகள் ஏறும் யேதென்று கோஉடு முறிந்திடலாகும் நாவினில் தேய்த்து
காவிய வென்னீரில் மடித்திடத் தீரும் கன்னிகள் யதான இன்னில மதனில் யெல்லாச்
சுரமும் பூவிடை வென்னீரில் கொள்ள விட்டகலாடும் கடுக்காய்ச் சுரசம் காசிடை
கொள்ள யிடுக்கமான சுரம் பனிரெண்டுந் தீரும் முடுக்கு மார் குளிச் சுரம் முப்பத்
தொன்பது அடுக்கு மென சுக்கிலம் அன்னீரில் கொள்ள சீதேவி செங்கழுநீர் சிக்கரந்
தன்னில் கொள்ள மூதேவி சுரமும் முறிந்திடலாகும் எட்டு சுரமும் யேலமுளகுடன்
அஉஷ்ட சுர அஸ்தி சுரம் போம் மந்தமும் வலிப்புகள் தீர சந்ததம் படுத்தி
சாத்தினில் (மேல் தொடர்ச்சி யில்லை)

<u>தேங்காய் லேகியம்</u>:-

லிங்கம் விராகனிடை.உ, பூரம் விராகனிடை.உ, காந்தம் விராகனிடை.உ, பொரிகாரம் விராகனிடை.உ, பெருங்காயம், சீனக்காரம், இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, சவுக்காரம், ஓமம், நவசாரம், திப்பிலி, மிளகு, சுக்கு ஆக வகைக்கு விராகனிடை.½, பூண்டு பலம்.உ, இது வெல்லாம் உத்தாமணிச் சார் விட்டு ஒரு சாமமரைக்கு முத்தக் தேங்காய்குள்ளே அடைத்து சீலை துணியிலே கண்ணடைத்து சிவப்பு பசுவின் சாணி கட்டி புடத்தில் வைத்து வெந்த பிற்பாடு எடுத்து ஏடு தள்ளி அரைத்து சட்டியில் வைத்து விளக்கெண்ணை ½ படி விட்டுக் கிண்டி வெண்ணை போல் பக்குவத்தில் இறக்கி வச்சிரப் பால் ஒரு கரண்டி விட்டு கிளறி வைத்துக் கொண்டு பாக்களவு சாப்பிடவும்.

⁂⁂
முற்றும்
⁂⁂

சு.ச:4.4.64.